Registered as a news paper. இலவசப் பிரதி பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மாசி 30 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 முஹறம் 10 (14.03.2003) வெள்ளிக்கிழமை இதழ் :162

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
ரா ம் கோ
(சி-653)



நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹெல்கிசனை வரவேற்கும் அன்ரன் பாலசிங்கம், அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும் திருமதி அடேல் பாலசிங்கம் ஆகியோரை முதலாவது படத்திலும் பேச்சுக்களை நடாத்தும் நோர்வேக் குழுவினரையும், புலிகள் தரப்பினரையும் இரண்டாவது, மூன்றாவது படங்களிலும் காணலாம்.

# பேச்சில் பங்குபற்றுவது குறித்து

# பிரபாவே இறுதி முடிவு எடுப்பார்!

## செய்தியாளர் சந்திப்பில் அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

**நோர்வே பிரதி அமைச்சர் ஹெல்கிசனுடனான நேற்றைய எமது சந்திப்பு தொடர்பான விபரங்களை, தலைவர் பிரபாகரனுக்கு எடுத்துக் கூறுவோம். தலைவருடனான சந்திப்பைத் தொடர்ந்து பேச்சுக்களில் கலந்துகொள்வது குறித்து இறுதியான முடிவை இன்னும் சில தினங்களில் எடுப்போம் என புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நேற்று தெரிவித்தார்.**



நோர்வே அமைச்சர் ஹெல்கிசனுடான சந்திப்பைத் தொடர்ந்து நேற்று அவர் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசினார். இதன்போது அவர் இத்தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

எமது இன்றைய (நேற்று) சந்திப்பில், தற்போதைய அரசியல் நிலைமை பற்றியும் திருமலை ஆழ்கடலில் நடந்த கப்பல் மூழ்கடிப்புச் சம்பவம் பற்றியும் ஆராய்ந்தோம்.

**பிரபாவுடன் பேசி இறுதி முடிவு**

ஜப்பானில் நடைபெறவுள்ள அடுத்த சுற்றுப் பேச்சுக்களில் அநேகமாகக் கலந்துகொள்வோம் என நினைக்கின்றேன். எனினும், தலைவருடன் கலந்துபேசியே இறுதி முடிவை எடுக்கமுடியும். இன்னும் ஒரு சில நாட்களில் முடிவு வெளியாகும்.

தற்போதைய நிலைமை குறித்து உயர்மட்டத்துடன் பேசி ஓர் ஆக்க பூர்வமான தீர்வைக் காணுமாறு நோர்வே அமைச்சர் ஹெல்கிசன் எம்மைக் கோரினார். இப்படியான

(12 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



படைக்காரர் அடாவடியை அடக்குங்கோ! சமாதானம் சறுக்காது!!

## நோர்வே அமைச்சர் கிளிநொச்சி விஜயம்

(கிளிநொச்சி)

நோர்வே பிரதி வெளியுறவு அமைச்சர் விதார் ஹெல்கிசன் தலைமையிலான நோர்வே உயர் மட்டக்குழுவினர், நேற்றுக்காலை கிளிநொச்சிக்கு வருகை தந்தனர்.

நேற்றுக்காலை 9.30 மணியளவில் விமானப்படை உலங்குவானூர்தி மூலம், கிளிநொச்சி பொது விளையாட்டரங்கில் இவர்கள் வந்திறங்கினர்.

இக்குழுவில்- நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க், ஊடகச் செயலாளர் தோமஸ் மற்றும் இரு நோர்வே மெய்க்காவலர்கள் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

கிளிநொச்சி வந்திறங்கிய இக்குழுவினரை, விடுதலைப் புலிகளின் அரசியற்துறை துணைப் பொறுப்பா

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படைத் தாக்குதல் சரியானதே என்கிறார் அமைச்சர் பீரிஸ்

சர்வதேச கடற்பிரதேசத்தில் இடம்பெற்ற, விடுதலைப் புலிகளின் கப்பல் மீதான தாக்குதல், சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்குக் குந்தகம் விளைவிக்காது என்று அரசு நம்புகின்றது.

இச்சம்பவத்தை விடுதலைப் புலிகள் கண்டித்துள்ள அதேவேளையில், அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தையின் நிர்ணயத்திகதியைப் பின்போடுமாறு அவர்கள் கேட்கவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானத்தை தொடர நடவழக்கை எடுப்போம்!

### நோர்வே பிரதி வெளியுறவு அமைச்சர்

(கிளிநொச்சி)



நாம் அரச தரப்பையும், விடுதலைப் புலிகள் தரப்பையும் சந்தித்து, சமாதான முயற்சிகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பது குறித்து நடவடிக்கை எடுக்கவுள்ளோம் என, நேற்று கிளிநொச்சி வந்திருந்த நோர்வே பிரதி வெளியுறவு அமைச்சர் விதார் ஹெல்கிசன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் புலிகளுடன் நடத்திய சந்திப்பைத் தொடர்ந்து, கொழும்பு சென்று அரச தரப்பினரையும் சந்தித்துப் பேசவுள்ளோம். எவ்வாறும் பிரச்சினைகளைத் தீர்த்து சமாதானத்தைத் தொடர முயற்சிப்போம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மட்டு. லெப். கேணல் பாலேந்திரா பயிற்சிக் கல்லூரியில்

# அதிகாரிகளுக்கான பயிற்சி முடித்து 89 போராளிகள் வெளிவந்தனர்!

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் அதிகாரிகளுக்கான விசேட பயிற்சியை நிறைவுசெய்துகொண்ட எண்பத்தொன்பது போராளிகள் நேற்று வெளியேறியுள்ளனர்.

மட்டக்களப்பில் உள்ள லெப். கேணல் பாலேந்திரா பயிற்சிக் கல்லூரியில் இவர்களுக்கான சுமார் ஒருவருட பயிற்சி வழங்கப்பட்டது.

இப்பயிற்சியை நிறைவுசெய்து வெளியேறும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

மட்டக்களப்பு, கரடியனாறு தேனகம் மைதானத்தில் நடைபெற்ற இவ்வைபவத்தில், மூத்த தளபதி கேணல் கருணா, மட்டு. - அம்பாறை மகளிர் சிறப்புத் தளபதி நிலாவினி, மட்டு. - அம்பாறை சிறப்புத்தளபதி நாகேஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அங்கு நடைபெற்ற அணிவகுப்பு மரியாதையையும் இம்மூன்று தளபதிகளும் ஏற்றுக்கொண்டனர். இப்பயிற்சியை முடித்து வெளியேறிய போராளிகளுக்குரிய பதக்கங்களை அவர்களின் பெற்றோர் அணிவித்தனர். அவர்களுக்கான சான்றிதழ்களை மூத்த தளபதி கருணா வழங்கினார். (10)

## அல்லைப்பிட்டி சோதனை நிலையத்தில்

# இன்று தீவக மக்கள் மறியல் போராட்டம்!

(தீவகம்)

தீவகத்தில் அண்மைக்காலமாக அதிகரித்துவரும் மக்கள் மீதான கடறபடையினரின் சோதனை மற்றும் கெடுபிடி நடவடிக்கைகளைக் கண்டித்து, இன்று காலை அல்லைப்பிட்டியில் மறியற் போராட்டம் ஒன்று நடாத்தப்படவுள்ளது.

அல்லைப்பிட்டி சோதனைச்சாவடிக்கு முன்பாக, இன்று காலை 8 மணிக்கு இம்மறியற்போராட்டம் ஆரம்பமாகவுள்ளது.

தீவக மக்கள் நலன் காப்பகம் இம்மறியற் போராட்டத்தை ஏற்பாடு செய்திருக்கிறது. அரச ஊழியர்கள் மற்றும் தீவக மக்கள் பலரும் இப்போராட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளனர்.

# நோர்வேப் பிரதி அமைச்சர் ஹெல்கிசன் - விடுதலைப் புலிகள் சந்திப்பிலிருந்து...



கலாநிதி அன்ரன் பாலசிங்கம், தமிழ்ச்செல்வன், திருமதி அடேல் பாலசிங்கத்தினால் வரவேற்கப்படும் நோர்வேத் தரப்பை முதலாவது படத்திலும் ஹெல்கிசன் மற்றும் வெஸ்பேர்க்கை இரண்டாவது படத்திலும் - பேச்சுக்களில் பங்கேற்ற நோர்வேக் குழுவினரை மூன்றாவது படத்திலும் காணலாம்.



மதிய உணவிற்காகச் செல்லும்போதும் தீவிர ஆலோசனையில் ஹெல்கிசன், பாலா. உடன், தமிழ்ச்செல்வன்.

நிறைஞ்சனாஸ் சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
பிரபு, வைஜயந்தி நடித்த
வண்ணத்தமிழ் பாட்டு
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 மணி காட்சி
RUSH HOUR - 2
(சி-627)


ராஜா யாழ்ப்பாணம்.
காசி புகழ் விக்ரம், லைலா, விவேக், வையாபுரி, நாசர் நடித்த
தில்
நேரம்:- 10.30, 2.30, 6.30, 9.30 காட்சி
(சி-628)

யாழ். போதனா வைத்தியசாலை
சிற்றுண்டிச்சாலைப் பணியாளர் தேவை
1. எழுதுநர் (பெண்)
2. உணவு பரிமாறுபவர்
3. தேநீர் தயாரிப்பாளர்
உடன் தொடர்புகொள்ளவும்.
(சி-677)

# பொன் அணிகள் போர் 86th ENCOUNTER

## இன்றும் நாளையும் அதிரடித் தாக்குதல்களுடன் சமர்!

### புனித பத்திரிசியார் கல்லூரி



*அமர்ந்திருப்போர்* - (இடதுவலமாக) திரு.பி.ஜெயக்குமார் (பொறுப்பாசிரியர்), எஸ்.பொல்டன் ஹெஸ்ரன், ஆர்.நிஷாந்தன், ஏ.எல்.சுஜீவன், சீ.ஆர்.எம்.கிருசாந்தன் (அணித்தலைவர்), வண. பிதா ஜஸ்ரின் பி.ஞானப்பிரகாசம் (RECTOR), ஜீ.செல்வின் லொயிட் (உபதலைவர்), எஸ்.அருண் நாத், ஆர்.வினோதன், திரு.எஸ்.சகாயராஜா (விளையாட்டுப் பொறுப்பாளர், பயிற்றுநர்)

*பின்வரிசை* - (இடதுவலமாக) கே.சதீஸ்குமார், எஸ்.சுதர்சன், பி.அனிஜன், சீ.ஆர்.எம். றொஷாந்தன், சீ.டீ.றொசிங்ரன், எம்.றஜீந்திரன், எஸ்.எம்.பீலிக்ஸ், ஏ.ஜே.வின்சன், பி.நிதர்ஜன், வி.விதுபாலா.

*1. சீ.ஆர்.எம்.கிருஷாந்தன்* - அணித்தலைவர். வலதுகைத் துடுப்பாட்டம். இடதுகை சுழற்பந்துவீச்சு - CONSISTENT - சிறந்த களத்தடுப்பு. பரியோவான் கல்லூரிக்கு எதிராக கூடுதலாக 75 ஓட்டங்கள்.

*2. ஜீ.செல்வின் லொ்யிட்* - துணைத்தலைவர்-வலதுகை ஆரம்ப வேகப்பந்துவீச்சு. வடமாகாண SCHOOL BOY CRICKETER முதன்மை நிலை இரண்டு.

*3. ஆர்.நிஷாந்தன்* - விக்கெட் காப்பாளர்-நம்பகம் நிறைந்த துடுப்பாட்டம் - இவரிடம் நிறைய கிரிக்கெட் TALENTS உண்டு.

*4. எஸ்.அருண்நாத்* - கனகரத்தினம் ம.ம. விக்கெதிராக 17 ஓட்டம், 6 விக்கெட். புறக்களப் பந்துத்தடுப்பில் சிறப்பு.

*5. ஆர்.வினோதன்* - கவர்ச்சிகர மத்திய வரிசை வலதுகைத் துடுப்பாட்டம். திறமையான COVER நிலை களத்தடுப்பு.

*6. எஸ்.பொல்டன் ஹெஸ்ரன்* - சிறந்த வலதுகை சுழற்பந்துவீச்சு. அதிரடி துடுப்பாட்டம். சிறந்த CLOSE IN களத்தடுப்பாளர்.

*7. ஏ.எல்.சுஜீவன்* - வலதுகை ஆரம்பத் துடுப்பாட்டம். சிறந்த SLIP நிலை களத்தடுப்பாளர். வலதுகை மிதவேகப் பந்துவீச்சு.

*8. எஸ்.சுதர்சன்* - புதியவர். வலதுகை ஆரம்பத் துடுப்பாட்டம். வலதுகை சுழற்பந்து வீச்சு. சிறந்த CLOSE IN களத்தடுப்பு.

*9. ஏ.ஜே.வின்சன்* - புதியவர். வலதுகை மிதவேகப் பந்துவீச்சு. எந்தநிலைக்கும் பொருத்தமான களத்தடுப்பாளர்.

*10. சி.ஆர்.எம்.றொசாந்தன்* - புதியவர். வலதுகை மிதவேகப் பந்துவீச்சு. வலதுகை அதிரடி ஆட்டம். சிறந்த களத்தடுப்பு.

*11. எம்.ரஜீந்திரன்* - புதியவர். உபயோகமான மாற்றுப் பந்துவீச்சாளர். வலதுகை அதிரடி வீரர். புறக்கள சிறந்த களத்தடுப்பு.

*12. எஸ்.எம்.பீலிக்ஸ்* - புதியவர். சிறந்த களத்தடுப்பாளர்.

*13. பி.அனிஜன்* - புதியவர். வலதுகைத் துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சாளர்.


*14. சி.டி.றொஷிங்ரன்* - புதியவர். வலதுகைத் துடுப்பாட்டம்.

*15. பி.நிதர்ஜன்* - புதியவர். வலதுகைத் துடுப்பாட்டம். புறக்களத்தடுப்பாளர்.

*16. கே.சதீஸ்குமார்* - புதியவர். வலதுகைத் துடுப்பாட்டம்.

*17. வி.விதுபாலா* - புதியவர். BABY OF THE TEAM. இடதுகைப் பந்துவீச்சாளர்.

### யாழ்ப்பாணக் கல்லூரி



*அமர்ந்திருப்போர்* - (இடதுவலமாக) திரு.பி.எல்.மோகனகுமார் (பயிற்றுநர்), என்.எஸ். செந்தூரன், எஸ்.ஜே.நிம்ரோ (உபதலைவர்), திரு.நொயல் ஏ.விமலேந்திரன் (அதிபர்), எஸ்.எம்.திலீபன் (அணித்தலைவர்), என்.ரமணன், திரு.ஏ.ஜெயராஜன் (உடற் கல்விப் பயிற்றுநர்)

*பின்வரிசை* - (இடதுவலமாக) எஸ்.செல்வகுமார், எம்.அகிலநாதன், எஸ்.ஜே. நிரோஷன், வை.துஜன், கே.சுகாஷ், வி.நிருபரன், ஜீ.கோகிலரமணன், கே.உதயகுமார், ரி.தரணீதரன், எஸ்.தனரன்.

*1. எஸ்.எம்.திலீபன்* - அணித்தலைவர். வலதுகை மிதவேகப்பந்து வீச்சு. வலதுகை அதிரடித் துடுப்பாட்டம். ஸ்கந்தாவுக்கு எதிரான 67, அதிகூடிய ஓட்டம்.

*2. எஸ்.ஜே.நிம்ரோ* - உபதலைவர். வலதுகைத் துடுப்பாட்டம் மற்றும் வலதுகைப் பந்துவீச்சு.

*3. என்.எஸ்.செந்தூரன்* - நம்பகமான இடதுகைத் துடுப்பாட்டம். சிறந்த களத்தடுப்பு.

*4. எஸ்.ஜே.நிரோஷன்* - விக்கெட் காப்பாளர். கவர்ச்சிகர, நம்பகரமான வலதுகைத் துடுப்பாட்டம். மகாஜனா மற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரிகளுக்கெதிரான தலா 49 ஓட்டங்கள், இவரது கூடிய ரன் குவிப்பு.

*5. கே.சுகாஷ்* - வேகமாக ரன் பெறும் தாகம் கொண்ட வலதுகை ஆரம்பத் துடுப்பாட்டம். ஹாட்லிக்கு எதிரான கூடிய ஓட்ட எண்ணிக்கை 60.

*6. ஜீ.கோகிலரமணன்* - நம்பகமான துடுப்பாட்டம். சிறந்த களத்தடுப்பு.

*7. எம்.ரமணன்* - ஓட்டத்தாகம் நிறைந்த வலதுகை மத்திய வரிசைத் துடுப்பாட்டம். சிறந்த களத்தடுப்பாளர்.

*8. வை.துஜன்* - ஊடுருவும் தன்மை கொண்ட வலதுகை ஆரம்பப் பந்துவீச்சாளர். வலதுகைத் துடுப்பாட்டம். அணியின் வேகப் பந்துவீச்சாளர்.

*9. ஜே.ராஜ்குமார்* - மத்திய வரிசை அதிரடி இடதுகைத் துடுப்பாட்டம். LEG SPINNER. சிறந்த களத்தடுப்பு. மகாஜனாவுக்கு எதிராக 78 ஓட்டங்கள். யாழ். இந்துக் கல்லூரி மற்றும் ஹாட்லிக் கல்லூரிக்கெதிராக தலா 50 ஓட்டங்கள்.

*10. எஸ்.உதயகுமார்* - இடதுகை ஆரம்பப்பந்து வீச்சாளர். நம்பகம் நிறைந்த வலதுகைத்துடுப்பாட்டம்.

*11. எஸ்.தனரன்* - இடதுகை மிதவேகப் பந்துவீச்சாளர். வலதுகைத் துடுப்பாட்டம்.

*12. வி.நிருபரன்* - வலதுகை அதிரடித் துடுப்பாட்ட வீரர்.

*13. எம்.அகிலநாதன்* - சிறந்த களத்தடுப்பாளர்.

*14. ரி.தரணீதரன்* - வலதுகை மிதவேகப் பந்துவீச்சாளர்.

*15. ஆர்.ஜெரோம்பிள்ளை* - வலதுகை அதிரடித் துடுப்பாட்ட வீரர்.

*16. எஸ்.செல்வகுமார்* - வலதுகைப் பந்துவீச்சாளர்.

## இந்தியாவிடம் சீருடைகள் கொள்வனவு

இலங்கை இராணுவத்தினருக்கான சீருடை மற்றும் தலைக்கவசங்களை விநியோகிப்பதற்கான கொள்வனவுக் கட்டளைகளை இந்திய நிறுவனம் பெற்றிருப்பதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## விமானக் கட்டணம் அதிகரிப்பு

சிறிலங்கா எயர் லைன்ஸ் நிறுவனம் விமானப் பயணக் கட்டணத்தை நேற்று முதல் 20 டொலரால் அதிகரித்துள்ளது. இதன்படி, இருவழிக் கட்டணம் 20 டொலராலும், ஒருவழிக்கட்டணம் 10 டொலராலும் உயர்த்தப்பட்டிருப்பதாக நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# நாளைக்குள் அரசு உரிய பதில் தராவிடின் நீராகாரம் அருந்துவதையும் நிறுத்துவோம்!

## உண்ணாவிரதமிருக்கும் களுத்துறைக் கைதிகள் எச்சரிக்கை

(கொழும்பு)

களுத்துறைச் சிறைச்சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் தமிழ் அரசியற்கைதிகள், நாளைக்குள் தமது கோரிக்கைக்கு அரசாங்கம் உரிய பதில் வழங்காவிடின், தாம் பெற்றுவரும் மருத்துவ சிகிச்சையை நிறுத்தப்போவதாக எச்சரிக்கை செய்துள்ளனர்.

உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியற்கைதிகளின் நிலை நாளுக்குநாள் மோசமடைந்து வருகின்றது. இவர்களில் அநேகமானோருக்குச் சிறையில் வைத்தே மருத்துவர்களால் சேலைன் ஏற்றப்பட்டுவருகின்றது.

நாளைக்குள் அரசாங்கம் தமது கோரிக்கைக்கு உரிய பதிலை வழங்காவிட்டால், தற்போது பெற்றுக்கொண்டிருக்கும் மருத்துவ உதவியையும், நீராகாரம் அருந்துவதையும் நிறுத்திவிடப்போவதாகக் கைதிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியற்கைதிகளில் ஐந்துபேரை விடுவிப்பதற்குச் சட்டமா அதிபர் திணைக்களம் ஏற்பாடுகளைச்செய்து வருவதாகத் தெரியவருகின்றது.

ஏனைய அரசியற்கைதிகள் குறித்த தீர்மானம் நாளை சனிக்கிழமை எடுக்கப்படும் என்றும் சட்டமா அதிபர் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

# பிரதமர் ரணிலுடன் ஹெல்கிசன் கண்டியில் இருமணிநேரம் பேச்சு!

(கொழும்பு)

நோர்வேயின் பிரதிவெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் நேற்றுமுன்தினமிரவு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை கொழும்பு வந்து சேர்ந்த விதார் ஹெல்கிசன், இரவு கண்டியைச் சென்றடைந்தார். அங்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை 'மாவலி பீச்' ஹோட்டலில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இரவு 8.45 மணியளவில் ஆரம்பித்த பேச்சுக்கள் சுமார் இரண்டு மணிநேரம் நீடித்ததாகத் தெரியவருகின்றது. இச்சந்திப்பில் ஜப்பானில் நடைபெறவுள்ள அடுத்த சுற்றுப் பேச்சுக்கள் தொடர்பாகவும், புலிகளின் கப்பல் கிழக்குக் கடற்பரப்பில் மூழ்கடிக்கப்பட்டது குறித்தும் இருவரும் விரிவாக ஆராய்ந்தனர்.

நோர்வே பிரதிவெளிவிவகார அமைச்சர் ஹெல்கிசனுடன் இலங்கைக்கான நோர்வேத் தூதுவரும் பிரதமர் ரணிலைச் சந்தித்திருந்தார். இச்சந்திப்பில் அமைச்சர்கள் ஜி.எல். பீரிஸ், மிலிந்த மொறகொட ஆகியோர் உடனிருந்தனர்.

# சுவிஸ் சமஷ்டி அமைப்புமுறை குறித்து 11 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆராய்வு!


(கொழும்பு)

பதினொரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுமுதல் சுவிற்சர் லாந்து நாட்டின் சமஷ்டி அமைப்புமுறை குறித்து ஆராய்ந்து வருகின்றனர்.

ஜெனிவாவுக்குச் சென்றுள்ள இந்தக் குழுவில் அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன, பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த சுசில் பிறேம்ஜெயந்த, புத்திரசிகாமணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த இரா. சம்பந்தன், முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் ரிஷாட் பதியுதீன் உள்ளிட்ட 11 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடம்பெற்றுள்ளனர்.

ஜெனிவாவில் தங்கியிருக்கும் இவர்கள், சுவிஸ் சமஷ்டி அமைப்பில் மொழியுரிமைகள் குறித்து விசேட கவனம் செலுத்தவுள்ளதாகவும் தெரியவருகின்றது. இவர்கள் ஆறு நாட்கள் பல்வேறு அரசியல் அமைப்பு நிபுணர்கள், சட்ட ஆலோசகர்களுடன் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளனர்.

## நாடும் நடப்பும்....




# ஊடகங்களை அச்சுறுத்துவதற்கு ஜே.வி.பிக்கு யார் அதிகாரமளித்தது?

## சுனந்த தேசப்பிரிய கேள்வி

ஊடகங்களையோ அல்லது ஊடகவியலாளர்களையோ அச்சுறுத்துவதற்கு எந்தவொரு அரசியற்கட்சிக்கும் அதிகாரம் கிடையாது.

- இவ்வாறு சுதந்திர ஊடக இயக்கத்தின் அமைப்பாளரான சுனந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

அண்மையில் கொழும்பில் நடந்த பேரணியில் உரைநிகழ்த்திய ஜே.வி.பி பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச, சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் ஊடகங்களை எச்சரித்திருந்ததோடு, அவற்றை முற்றுகையிடப் போவதாகவும், தண்டனை விதிக்கப்போவதாகவும் தெரிவித்திருந்தார்.

இதுகுறித்துக் கருத்து வெளியிட்டபோதே, சுனந்த தேசப்பிரிய மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்சவின் கருத்துக்கள் ஊடகசுதந்திரத்தை அச்சுறுத்துவதாக உள்ளது. இது ஒரு அடிப்படை மனித உரிமை மீறலாகும்.

எந்தவொரு ஊடகத்துக்கோ, ஊடகவியலாளருக்கோ, அரசியல் நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதற்கான தார்மீக உரிமையுள்ளது. இதனை எந்த அரசியற்கட்சியாவது பறிக்கமுடியாது.

விமல் வீரவன்ச ஊடகங்களை முற்றுகையிட்டு மூடப்போவதாகவும், ஊடகவியலாளர்களுக்குத் தண்டனை விதிக்கப்போவதாகவும் தெரிவித்துள்ளார். எந்தவொரு அரசியற் கட்சிக்குமே இப்படியான அதிகாரம் கிடையாது என்று சுனந்த தேசப்பிரிய மேலும் தெரிவித்தார்.

# ரத்வத்தவுக்கு சார்பாக பொய்ச்சாட்சி; சொல்லிய சிப்பாய்க்குச் சிறை!

கண்டி - உடதலவின்ன படுகொலை வழக்கில் நீதிமன்றில் பொய்ச்சாட்சி சொன்ன ஊர்காவற்படை வீரர் ஒருவரை, விளக்கமறியலில் வைக்க மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

உடதலவின்னவில் கடந்த 2001 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலின் போது, 10 முஸ்லிம்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்த வழக்கில் முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த மற்றும் அவரது புதல்வர்களான மஹேன், சானக ஆகியோருக்கு எதிராகக் கண்டி நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறுவதுடன், அவர்கள் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கில் ஜெனரல் ரத்வத்தவுக்குச் சார்பாகப் பொய்ச்சாட்சி சொன்ன ஜெயசூரிய என்ற ஊர்காவற்படை வீரரையே விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

## நுளம்பு வலைகள் அன்பளிப்பு

(திருநெல்வேலி)

திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகத்தால் மருதங்கேணியில் வசிக்கும் 50 குடும்பங்களுக்கு நுளம்புவலைகளும், ஊனமுற்ற ஒருவருக்கு முச்சக்கரவண்டியும் வழங்கப்படவுள்ளது.

மேற்படி நிகழ்வு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவு காரியாலயத்தில் நாளை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

# கடற்படை வாங்கவுள்ள அமெரிக்கப் போர்க்கப்பல்




அமெரிக்காவிடம் இருந்து இலங்கைக் கடற்படைக்கென வாங்கப்படவுள்ள போர்க்கப்பல் பற்றிய விபரங்கள் வருமாறு:

பெயர் - 'Courageous" (கரேஜஸ்)
வகை - கரையோரப் பாதுகாப்பு விரைவுப் போர்க்கப்பல்.
பெறுமதி - 150 மில்லியன் டொலர்.
நீளம் - 210 அடி
கூடிய வேகம் - 18 நொட்ஸ்
சாதாரண வேகம் - 14 நொட்ஸ்
பொருத்தப்பட்டுள்ள ராடர்கள்
- ஏ.என்.எஸ்.பி.எஸ் 23/1968
- 2X எஸ்.பி.எஸ் 64
பொருத்தப்பட்டுள்ள ஆயுதங்கள் -
- எம்.கே. 22 3 - அங்குலம் 50 - 01
- 81 மி.மி மோட்டார் - 02
- எம் 2 எச்.பி 0.50 இயந்திரத் துப்பாக்கி - 02

இவற்றை விட கடற்படை பயன்படுத்தும் ஏனைய ஆயுதங்களையும் பொருத்தலாம்.

கரையிலிருந்து 500 கடல் மைல்வரை சென்று நடவடிக்கையில் ஈடுபடும் இக் கப்பலில் - 12 அதிகாரிகள் உட்பட 84 கடற்படையினர் பணியாற்றுவர். இதில் ஹெலி இறங்கு தள வசதியும் உள்ளது.

# வைகோ, நெடுமாறன் கைதைக் கண்டித்து தமிழகம் தழுவியதாக ஹர்த்தால்!

## அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம்

(தமிழ்நாடு)

பொடா சட்டத்தைத் தமிழக அரசு தவறாகப் பயன்படுத்துவதைக் கண்டித்துத் தமிழகம் தழுவிய ஹர்த்தால் ஒன்றுக்கு தி.மு.க. தலைமையிலான அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

எதிர்வரும் 23 ஆம் திகதி தமிழகம் தழுவிய் ரீதியில் இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளது. தமிழக அரசு பொடா சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தி- வைகோ, நெடுமாறன் போன்றோரைச் சிறையிலடைத்துள்ளது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே தி.மு.க. தலைவர் கருணாநிதி அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டியிருந்தார். இக் கூட்டத்திற்கு அ.தி.மு.க, பா.ஜ.க என்பனவற்றுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

பொடாவை தி.மு.க. ஆதரித்த தாக்கூறி- காங்கிரஸ், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் என்பன கருணாநிதியின் அழைப்பை நிராகரித்திருந்தன.

ஏனைய கட்சிகள் இந்த அனைத்துக் கட்சிக்கூட்டத்தில் பங்கேற்றதோடு, 23 ஆம் திகதி நடைபெறவுள்ள ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவித்தன. இக்கூட்டத்தில் பொடா சட்டம் தவறாகப் பயன்படுத்தப்பட மாட்டாது என வாஜ்பாய் வழங்கிய உறுதிமொழியை மீறிவிட்டார் எனக் கருணாநிதி குற்றஞ்சாட்டினார்.

# உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமாவுக்கு லண்டன் கணக்காளர் நிறுவன அங்கீகாரம்

## செய்தியாளர் மாநாட்டில் தகவல்

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமா (எச்.என்.டி.ஏ) நிறைவு செய்த மாணவர்களுக்கு, லண்டன் நிதியியல் கணக்காளர் நிறுவனத்தின் அங்கீகாரத்துடனான சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.

அண்மைக்காலமாக பல்கலைக் கழகங்களிலும், தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் கற்கைநெறிகளைப் பூர்த்திசெய்து சான்றிதழ்களையும், பட்டங்களையும் பெற்ற பலமாணவர்கள், வெளிநாடுகளில் தமது கற்கைநெறிக்கேற்ற வேலைவாய்ப்புக் கிடைக்காமையினால் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே, இப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமுகமாகவும், யாழ்ப்பாண மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்தி, அவர்களுக்குச் சர்வதேச அங்கீகாரத்துடனான சான்றிதழ்களை வழங்கி, வெளிநாடுகளில் வேலைவாய்ப்புக்களைப்பெற நடவடிக்கை எடுக்கும்படியும்- பலரும் கோரிக்கை விடுத்ததனால், யாழ். தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் யோகராஜன் மேற்கொண்ட முயற்சியின் பயனாக, லண்டன் நிதியியல் கணக்காளர் நிறுவனம்- யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியின் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா கற்கைநெறியின் பாடத்திட்டத்தை ஏற்றுக்கொண்டுள்ளது. இக்கற்கைநெறியில் சித்தியடையும் மாணவர்களுக்குத் தனது அங்கீகாரத்துடனான சான்றிதழை வழங்கவும் முன்வந்துள்ளது.

இதனை விளக்குமுகமாக யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் நேற்று முன்தினம் மாலை 2.30 மணியளவில் செய்தியாளர் மாநாடு ஒன்று நடைபெற்றது.

தொழில் நுட்பக்கல்லூரி அதிபர் யோகராஜன் தலைமையில் நடைபெற்ற இந்தச் செய்தியாளர் மாநாட்டில்- லண்டன் நிதியியல் கணக்காளர் நிறுவனத்தின் இலங்கைப் பிரதிநிதி கலாநிதி என்.குமரகுருபரன், தொழில்நுட்பக் கல்லூரியின் வணிகபீடத் தலைவர் ஜெயராஜ், ஐக்கிய பட்டதாரிகள் சங்கத் தலைவர் மணிமாறன், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் கஜேந்திரன் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

இதன்போது, தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் கஜேந்திரன் கருத்துத் தெரிவிக்கையில்- கிளிநொச்சிப் பிரதேசத்திலும் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்று உள்ளது. ஆனால், அங்கு வசதிகள் இல்லை. யாழ்ப்பாணத் தொழில்நுட்பக் கல்லூரியில் போதிக்கப்படும் கற்கைநெறிகள் பல அங்கு இல்லை. கிளிநொச்சியில் உயர்தரம் படித்துவிட்டு பல மாணவர்கள் உயர்கல்விக்கு வசதியில்லாமல் கூலிவேலை செய்கிறார்கள். ஏனெனில், அங்குள்ள தொழில் நுட்பகல்லூரியில் ஓர் சிறு தொகையான மாணவர்கள் மட்டுமே கற்கக்கூடிய வசதிகளுண்டு. எனவே, கிளிநொச்சியிலுள்ள தொழில்நுட்பக் கல்லூரியையும் தரம் உயர்த்துவதற்கு எல்லோரும் முன்வரவேண்டும்.

இங்கு போதிக்கப்படும் கற்கைநெறிகள் கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரியிலும் போதிக்கப்பட வேண்டும். அப்போதுதான் அங்குள்ள மாணவர்களும் உயர்கல்வியைப் பெறமுடியும் எனத் தெரிவித்தார்.

(லி)

# சின்னஞ்சிறு செய்திகள்

### சர்வதேச சினிமா தினம்

(யாழ்ப்பாணம்)

சலன சித்திர அமைப்பு ஏற்பாடு செய்துள்ள சர்வதேச சினிமாதின நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு அதன் தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் 'ஸ்கிறிப்நெற்' நிறுவனத்தின் யாழ்.திட்ட இணைப்பாளர் ஆ.ஞானதாஸ் விசேட விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். அன்றையதினம் குறுந்திரைப்படக்காட்சி, திரைப்பட விமர்சனம், திரைக்கதைப் பயிற்சி வகுப்புக் கலந்துரையாடல் என்பன நடைபெறவுள்ளன. (க)

### விவசாய வேலைப் பட்டறை

நீடித்து நிலைக்கக்கூடிய விவசாயம் என்ற கருப்பொருளிலான விவசாயநெறி வேலைப்பட்டறை இன்றும், நாளையும் யாழ்.பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. இதில் இங்கிலாந்தைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர்களும் கலந்துகொள்கின்றனர்.

### இல்ல மெய்வல்லுநர் போட்டிகள்

(நவிண்டில்)

கரவெட்டி சரஸ்வதி மகளிர் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி, நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணிக்கு வித்தியாலய அதிபர் சி.வல்லிபுரம் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக முன்னாள் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராசா கலந்துகொள்ளவுள்ளார்.

(116)

❖❖❖

பண்ணாகம் வடக்கு அ.மி.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப 2 மணிக்கு பாடசாலை அதிபர் க.இரத்தினேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் சங்கானைப் பிரதேசசெயலக உதவிப் பிரதேசசெயலர் எம்.சிவராசா பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளவுள்ளார்.

❖❖❖

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப. 2.30 மணிக்கு பாடசாலை அதிபர் சு.யோகராசா தலைமையில் நடைபெறவுள்ளது. இதில், அரச அதிபர் செ.பத்மநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

# உணவு விவசாய ஸ்தாபன ஆய்வுக்குழு வடமராட்சி நிலைமையை ஆராய்வு!

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சியில் தொண்டமனாறு தொடக்கம் பருத்தித்துறை முனை வரையிலான கடற்கரைப் பிரதேசத்தை உணவு, விவசாய ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஆய்வுக் குழு ஒன்று கடந்த 10 ஆம் திகதி பார்வையிட்டுச் சென்றுள்ளது.

உணவு, விவசாய ஸ்தாபனத்தைச் சேர்ந்த பொறியியலாளர் எஸ்.தயாபரன் தலைமையில் வெஸ்லி ஜோசப், கண்ணா பெர்ணாந்து ஆகியோருடன் யாழ். மாவட்ட கடற்தொழில் உதவிப் பணிப்பாளர் எஸ்.ஏ.ஜோசேப், பருத்தித்துறைக் கடற்தொழில் பரிசோதகர் எஸ்.ரவீந்திரன் ஆகியோரும் இக்குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசத்திற்கான யு.என்.டி.பி கருத்திட்டத்தின் ஆதரவுடன் உணவு, விவசாய அமைப்பினால் மேற்கொள்ளப்படும் இந்த ஆய்வில் வடக்கு-கிழக்கு மீன்பிடித்துறை பற்றிய மதிப்பீடு ஒன்று செய்யப்படவுள்ளதுடன், வட-கிழக்கு மூலதன வளங்களின் புனரமைப்பு, அபிவிருத்தி, முகாமைத்துவம் என்பன தொடர்பான திட்டமொன்றையும் தயாரிக்கவுள்ளது.


வட-கிழக்கு மாகாணத்தில் 8 மாவட்டங்களுக்கும் இந்த ஆய்வுக்குழுவினர் விஜயம் செய்து - அரச, மாகாணசபை, தனியார்துறை, கூட்டுறவுத்துறை, அரசசார்பற்ற நிறுவனங்களைச் சந்தித்து இந்த ஆய்வை மேற்கொள்ளவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### கரப்பந்தாட்ட விரிவுரை வகுப்புகள்

யாழ்.மாவட்டத்தில் சிறந்த கரப்பந்தாட்ட மத்தியஸ்தர்களை உருவாக்கும் நோக்குடன் இலங்கை கரப்பந்தாட்டச் சங்கத்துடன் - யாழ்.கரப்பந்தாட்டச் சங்கமும் இணைந்து நடாத்தும் விரிவுரை வகுப்புக்கள் நாளை ஆரம்பமாகி 17 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இவ்விரிவுரைகளை நடாத்துவதற்குக் கொழும்பிலிருந்து வி.வி.குணவர்த்தன, ஏ.பி.செனவிரட்ண, டபிள்யூ. அமரசிங்க ஆகியோர் வருகை தரவுள்ளனர்.

இதில் பங்குபற்ற விரும்புவோர் யாழ்.மாவட்டக் கரப்பந்தாட்டச் சங்கச் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.





யாழ்ப்பாணம் மற்றும் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் மத்தியஸ்தர்களுக்கென நடத்தப்பட்ட கலந்துரையாடலில், மத்தியஸ்தர்களுக்கான பிரச்சினைகள் மற்றும் விதிகள் தொடர்பாக எவ்.ஐ.எவ்.ஏ மற்றும் ஏ.எவ்.பி மத்தியஸ்தர் சங்கப் போதனாசிரியர் முகமட் முகைதீன் ஆரீவ் விரிவுரை நிகழ்த்துவதையும், கலந்துரையாடலில் பங்குபற்றியோரையும் படங்களில் காணலாம்.


வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

மூன்றாவது அகவையில்



பெயர் : லூ.டிரோன்
முகவரி: பாடசாலை வீதி,
சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------

முகவரி :------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றோர் ஒப்பம்


# யூனியன் கல்லூரிச் சூழலிலுள்ள காவலரண்கள் அகற்றப்படவேண்டும்!

## கல்வி அமைச்சர் பணிப்புரை

(யாழ்ப்பாணம்)

மாணவர்கள் கல்வி கற்பதற்கு ஏற்றதான சூழலை ஏற்படுத்த வேண்டும். அவர்களுக்குப் படையினர் எந்தவித இடையூறுகளும் ஏற்படாதவாறு நடந்துகொள்ளவேண்டும் எனப் பாடசாலை கல்வி அமைச்சர் சுரணிமல ராஜபக்ஷ படையதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டார்.

இருநாள் விஜயத்தினை மேற்கொண்டு யாழ்.வந்திருந்த அமைச்சர்- தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி ஆகியவற்றுக்கு விஜயம் செய்திருந்தார்.

யூனியன் கல்லூரிக்கு மாணவர்கள் செல்வதிலுள்ள பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இதனையடுத்துப் படையினரை அழைத்துப் பேசிய அமைச்சர்-

மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் கல்லூரிக்குச் செல்வதிலுள்ள நெருக்கடிநிலைகளை நீக்கவேண்டும் என கேட்டுக் கொண்டதுடன், பாடசாலைச் சுற்றாடலில் மாணவர்கள் கல்வி கற்பதற்கான சூழல் ஏற்பட இடையூறாகவுள்ள இராணுவக் காவலரண்கள், மிதிவெடிகள் அகற்றப்படவேண்டும் எனப் பணிப்புரை விடுத்தார்.

அதேவேளை- பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலுள்ள மிதிவெடிகளை, காவலரண்களை உடனடியாக அகற்றி- மாணவர்கள் இராணுவத்தினரின் எந்தவித அச்சுறுத்தலுமின்றிக் கல்வி கற்க உதவவேண்டும் எனவும் பணிப்புரை விடுத்தார்.

அதேவேளை, யுத்தத்தினால் சேதமடைந்த இருபாடசாலைகளினதும் கட்டடங்கள் சிலவற்றைப் புனரமைப்புச் செய்வதற்கான மதிப்பீடுகளை உடன் அனுப்பிவைக்குமாறும் அமைச்சர் பணிப்புரை விடுத்தார்.

(ச),(60)

## இடம்பெயர்ந்த மக்களுக்கு

# சீமெந்து வழங்கப்படாததால் குடிசை அமைப்பதில் சிரமம்

பலாலி, மயிலிட்டிப் பகுதிகளிலிருந்து சுமார் 12 வருடங்களுக்கு முன்னர் இடம்பெயர்ந்து பொறப்பதி, குடத்தனைப் பகுதிகளில் வசித்து வரும் இடம்பெயர்ந்த மக்களுக்கு- யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தால் குடிசைகள் அமைப்பதற்குக் கட்டடப் பொருட்கள் வழங்கப்பட்டபோதும், சீமெந்து வழங்கப்படவில்லை.

இதனால், இடம்பெயர்ந்த மக்கள் குடிசைகளை அமைப்பதில் பலத்த சிரமங்களை எதிர்நோக்குகிறார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. இப்பகுதியில் 20 குடும்பங்களைச் சேர்ந்த 180 பேர் வசிக்கிறார்கள் என்பது குறிபபிடத்தக்கது. (17)

# கருச்சிதைவு

# எச்சரிக்கையும், தகவல்களும்

**(1) என்ன முக்கியத்துவம்?**

வேண்டாத கர்ப்பங்களைக் கலைக்கும் நோக்கத்துடன் பல பெண்கள் கருச்சிதைவு செய்யக் கோருகிறார்கள். நமது நாட்டிலுள்ள சட்டப்படி கருச்சிதைவு சட்டவிரோதமானது. எனவே, ஆபத்தான முறையில் தகாத சூழலில் கருச்சிதைவைச் செய்யும் நிர்ப்பந்தத்திற்கு ஆட்பட்டு- அதனால் பல சிக்கல்களை அனுபவிக்கின்றார்கள். பலர் இதனால் இறக்கவும் நேரிடுகிறது. கர்ப்பத்தடை பற்றிய போதிய அறிவின்மை, கருச்சிதைவினால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களைப் பற்றித் தெரிந்திருக்காமை ஆகிய காரணங்களால்தான் பெரும்பாலானோர்கள் இத்தகைய கருச்சிதைவை நாடுகிறார்கள்.

**(2) சட்டம்**

**இலங்கைச் சட்டப்படி:-**

(i) தாய் சுமக்கும் கருவினால், தாயின் உயிருக்கு ஆபத்து என வைத்திய நிபுணர்கள் கருதும் பட்சத்தில் மாத்திரமே கருச்சிதைவு சட்டபூர்வமானது.

(ii) வேறு எந்தக் காரணத்திற்காகவும் கருச்சிதைவு செய்வது சட்டத்திற்கு முரணானதாகும்.

*உதாரணம்* :- (a) 16 வயதுப் பெண் வல்லுறவுக்குட்பட்டுக் கர்ப்பமானாலும் கருச்சிதைவு சட்டவிரோதமானது.

(b) 9 பிள்ளைகள் உடைய தாய், தனது 10 ஆவது கர்ப்பத்தைக் கலைப்பதும் சட்டவிரோதமானது.

(c) கருவில் வளரும் குழந்தை குறைபாடுடையதெனக் கண்டறிந்த போதும், அதைக் கலைப்பது முரணானது.

**(3) கருச்சிதைவு முறைகள்**

(1) பிற பொருட்கள் :- இவற்றைக் கருவறையினுள் உட்செலுத்துவதன் மூலம் சிதைவு தூண்டப்படுகிறது. இது பொதுவான முறையாகும்.

*உ+ம்:- குடைக்கம்பிகள் மெல்லிய தடிகள்*

(2) மருந்து வகைகள் :- சில வகை மருந்துப் பொருட்களை உட்கொள்வதன் மூலம் சிதைவை ஏற்படுத்தலாமென நம்பப் படுகிறது. ஆனால், பொதுவாக எந்தவொரு மருந்துவகையும் கருச்சிதைவை ஏற்படுத்துவதில்லை.

*உ+ம்:-மலேரியாக் குளிசைகள், கருத்தடை மாத்திரைகள்.*

இவற்றின் மூலம் கருச்சிதைவு ஏற்படும் சந்தர்ப்பம் குறைவு. ஆனால், குறைபாடுடைய குழந்தைகள் பிறக்கலாம் அல்லது குறைபாட்டுடன் குழந்தைகள் பிறக்குமோ என்ற பயம் உண்டாகும்.

**(4) யார்?**

அநேகமான மருத்துவ அறிவு இல்லாத போலி வைத்தியர்கள், பணம் ஈட்டும் நோக்கத்துடன் கருச்சிதைவைச் செய்கின்றனர்.

கருச்சிதைவு செய்யும் இடங்கள், கிருமித்தொற்றை ஏற்படுத்தக்கூடிய, ஒதுக்கமான இடங்களாக அல்லது கொல்லைப்புறங்களாகக் காணப்படுகின்றன.

❊ ஆனால், சில இடங்கள் பல வகை வசதிகள் செய்யப்பட்ட இடங்களாகவும் காணப்படுகின்றன. அங்கே மதுபான வகைகளை ❊ கொள்ளக் கொடுத்து கருச்சிதைவு செய்யப்படுகின்றதாம். ஆனாலும், இவ்விடங்களிலும் கிருமித்தொற்று அபாயம் காணப்படுகின்றது.

**(5) சிக்கல்கள்**

மருத்துவ அறிவோ, கிருமித்தொற்றைத் தடுப்பது பற்றிய அறிவோ இல்லாத நபர்கள் கருச்சிதைவை மேற்கொள்வதனால் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. இவற்றுள் மிகவும் பாரதூரமானது தாயின் இறப்பாகும். இது,

(i)அதிகளவு குருதிப்பெருக்கு (haemorrhage)

(ii) கிருமித்தொற்று (Scpsis)

(iii) ஈர்ப்பு வலி (Tetanus)

(iv) உடல் உள்ளுறுப்புகள் பாதிப்படைதல் (Perforation)

போன்றவற்றால் ஏற்படுகின்றது. இவை இறப்பை ஏற்படுத்தாதவிடத்தும் பல நீண்டகால பின் விளைவுகளை ஏற்படுத்தலாம்.

**(i) குருதிப்பெருக்கு**

உ+ம் :- 24 வயது திருமணமாகாத பெண், தனது 3 மாதக் கருவைக் கலைப்பதற்காகக் கருச்சிதைவைச் செய்பவரை நாடினார். கருச்சிதைவின்போது ஏற்பட்ட அளவுக்கதிகமான குருதிப்பெருக்குக் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு மேலதிக சிகிச்சை பயனளிக்காது இறப்பு ஏற்பட்டது.

பிறபொருட்களைக் கொண்டு கருச்சிதைவை ஏற்படுத்த யோனியூடாகக் கருப்பைக் கழுத்தை விரிவடையச் செய்யும் சமயத்தில் யோனியில் அல்லது கருப்பையில் கிழிவுகள் ஏற்படலாம். இதன்மூலம் அதிகளவு குருதி வெளியேறுவதனால் இறப்பு ஏற்படுகின்றது.

**மகப்பேற்று, பெண்ணோயியல் வைத்திய நிபுணர் Dr.G.பவானி**
**உள்ளக வைத்தியர்: Dr.A.கெனத்**

இதைத் தவிர, கருப்பையினுள் செலுத்தப்படும் பிற பொருட்கள் கருப்பையைக் கிழித்துச் சென்று வயிற்றுக் குழியினுள் காணப்படும் பிரதான இரத்தக் குழாய்களிலும் காயத்தை ஏற்படுத்திக் குருதியிழப்பு ஏற்படலாம்.

**(ii) கிருமித்தொற்று**

உ+ம் :- (a) 8 வயதுப்பிள்ளையின் தாயான 30 வயதுப் பெண்ணொருவர், தகாத உறவினால் ஏற்பட்ட கர்ப்பத்தைக் கலைப்பதற்கு முற்பட்டபோது, கிருமித்தொற்று ஏற்பட்டது. அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவேளை, அவருடைய இனப்பெருக்க உறுப்புக்களும், அவற்றிற்கு அண்மையில் உள்ள உணவுக் கால்வாய் உறுப்புக்களும் அழுகிய நிலையில் காணப்பட்டன. மேலதிக சிகிச்சைக்காகச் சத்திரசிகிச்சைக் கூடத்திற்கு எடுத்துச் செல்லும் வழியில் மரணமானார்.

(b) 38 வயதுடைய 7 பிள்ளைகளின் தாய் தனது 8 ஆவது கர்ப்பத்தைக் கலைப்பதற்கு மேற்கொண்ட முயற்சியில் அவருக்குக் கிருமித்தொற்று ஏற்பட்டு, அதன் விளைவாக மூளைக்கும் கிருமித்தொற்றுப் பரவிப் பக்கவாதம் ஏற்பட்டுள்ளது. தற்பொழுது 7 பிள்ளைகளுடன் இவரும் ஒரு குழந்தையைப்போல் அவரது கணவராலும், பிள்ளைகளாலும் பராமரிக்கப்பட்டு வருகின்றார்.

கருச்சிதைவுப் பொருட்களான கம்பிகள், தடிகள் போன்றவற்றில் கோடிக்கணக்கான நுண்கிருமிகள் காணப்படுகின்றன. இவற்றை உபயோகிக்கும் பொழுது கிருமிகள் இனப்பெருக்கத் தொகுதியினுள் செலுத்தப்படுகின்றன. இவை பெருக்கமடைந்து பாதிக்கப்பட்ட அங்கங்களை அழுகப்பண்ணுவதுடன், குருதியிலும் பரவி செப்ரிசீமியாவை அல்லது சிறுநீரகப் பாதிப்பை ஏற்படுத்தி இறப்பை உண்டாக்குகின்றன.

**(iii) ஈர்ப்பு வலி**

உ+ம் :- (a) 43 வயதுப் பெண்ணொருவர், அவரது மாதவிடாய் இரு மாதங்கள் தாமதமானதைத் தொடர்ந்து, கருச்சிதைவு செய்வதற்குத் தடியொன்றைக் கருப்பையினுள் செலுத்தி அதன் விளைவாக ஈர்ப்புவலி ஏற்பட்டு மரணமானார்.

துருப்பிடித்த கம்பிகள், ஈர்க்குகள் போன்றவற்றில் ஈர்ப்புவலிக் கிருமிகளின் வித்திகள் காணப்படுகின்றன. இவற்றின் மூலம் ஈர்ப்புவலி ஏற்பட இடமுண்டு.

**(iv) உறுப்புகள் சிதைவடைதல்**
(Organ damage / perforation)

உ+ம்:- (a) 30 வயதுப் பெண், தனது 4 ஆவது கர்ப்பத்தைக் கலைப்பதற்குக் கருச்சிதைவு செய்பவரின் உதவியை நாடினார். அவருக்குக் கருப்பை உட்சுருளை (Loop) உட்செலுத்திக் கருக்கலைப்புச் செய்ய எத்தனித்தபொழுது, கருப்பை உட்சுருள், சிறுநீர்ப் பையினுள் தவறுதலாகச் செலுத்தப்பட்டது. அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சத்திரசிகிச்சை மூலம் அவ்வுட்சுருள் அகற்றப்பட்டது.

இப்பெண்ணுக்குக் கருச்சிதைவின் பலனாக அதிக குருதிப்பெருக்கும், கிருமித்தொற்றும் ஏற்பட்டு- நீண்டகாலம் வைத்தியசாலையில் தங்கியிருக்கநேரிட்டது.

கருச்சிதைவை மேற்கொள்பவர்களில் பலர் இனப்பெருக்க உறுப்புக்கள் அமைந்துள்ள விதம் (Anatomy) பற்றித் தெரியாதவர்கள். கருவறையின் அண்மையில் சிறுநீர்ப்பை, குதவழி, உணவுக்கால்வாயின் பகுதிகள், பெரிய குருதிக்கலன்கள் ஆகியவை காணப்படுகின்றன. இவை பற்றிய அறிவைப் பெறாத- கருச்சிதைவு செய்பவர்கள் தவறுதலாக இந்த முக்கிய உறுப்புக்களைச் சேதப்படுத்தலாம்.

**(v) மலட்டுத்தன்மை**

உ+ம் :- (a) 35 வயதுப் பெண்ணொருவர், பல வருடங்கள் குழந்தைகள் இல்லையெனப் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டார். பரிசோதனையின்போது, அவரது பலோப்பியன் குழாய்கள் இரண்டும் அடைக்கப்பட்டுக் காணப்பட்டன. இது முன்னர் அவரிற்கு மேற்கொண்ட கருச்சிதைவின் விளைவாக ஏற்பட்ட கிருமித்தொற்றின் காரணமாக உண்டானது.

பிறபொருட்களைக் கருப்பையினுள் செலுத்தும்பொழுது ஏற்படுகின்ற கிருமித்தொற்றின் பின்விளைவாகப் பலோப்பியன் குழாய்களின் அடைப்பு ஏற்படுவது கண்டறியப்பட்டுள்ளது. இதன் விளைவாக மலட்டுத்தன்மை, குழாயினுள் குழந்தை தங்குதல் (Ectopic Pregnancy) போன்ற பாதக விளைவுகள் ஏற்படுகின்றன.

**(vi) உளரீதியான பாதிப்பு**
(Psychological Effect)

உ+ம் :- (a) 42 வயதுடைய பெண் நரம்புத் தளர்ச்சிக்காகச் சிகிச்சை மேற்கொண்டு வருகின்றார். அவர் தனது 20 ஆவது வயதில் மேற்கொண்ட கருச்சிதைவின் விளைவாகத் தனக்கு ஏற்பட்ட மனத்தாக்கத்திலிருந்து, நரமபுத்தளர்ச்சி ஏற்பட்டதாகக் கூறினார்.

(b) 30 வயதுப் பெண்ணொருவர், தனக்குத் திருமணத்தின் முன் ஏற்பட்ட கர்ப்பத்தைக் கலைத்ததன் காரணத்தால், இன்றுவரை குற்ற உணர்வுடனும், கவலையுடனும் இருந்து வருவதாகக் கூறினார்.

கருதங்கிய காலந்தொட்டு பெண்ணொருவர் தாய்மை எய்துகிறார். பலர் சமூக நிர்ப்பந்தத்தினாலும், குடும்பச் சூழல் காரணமாகவும் கருக்கலைப்பிற்கு உடன்படுகின்றனர். இருந்தும், அவர்களைப் பொறுத்தவரை தம் குழந்தையைத் தாமே கொலை செய்துவிட்டதாகக் குற்ற உணர்வுடன் எப்பொழுதும் இருந்து வருகின்றார்கள். இதன் காரணமாகப் பலர், உளரீதியான பாதிப்புக்குள்ளாகின்றார்கள்.

**(6) தடுப்பு முறைகள் :-**

1) விழிப்புணர்வை ஏற்படுத்தல்

இளம்பெண்கள் மத்தியில் கருச்சிதைவின் மோசமான விளைவுகள் பற்றிய அறிவை வளர்ப்பதன் மூலம், அவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தலாம். இதன்காரணமாகக் கருச்சிதைவின் எண்ணிக்கையைக் குறைக்க முடியும்.

2) கருத்தடை முறைகள்



கருத்தடை முறைகள், அதற்குப் பயன்படும் சாதனங்கள் பற்றிய அறிவையும், பயன்பாடுகளையும் அறிமுகப்படுத்துவதன் மூலம் வேணடாத கர்ப்பத்தைத் தவிர்க்கமுடியும். இதன்மூலம் கருச்சிதைவுகள் குறைக்கப்படலாம்.

3) பாலியல் கல்வி
(Health Education)

பாலியல் கல்வியைத் தகுந்த முறையில் போதிப்பதன் மூலமும், இப்பிரச்சினைகளைக் குறைக்க முடியும். அத்துடன், இலங்கையின் கருச்சிதைவு சம்பந்தமான சட்டங்களைச் சரிவரத் தெரிந்து வைத்திருப்பதன்மூலம் கருச்சிதைவு செய்பவர்களினால் ஏற்படும் அபாயங்களையும் குறைகக முடியும்.

கல்விமான்கள், சமூக சேவையாளர்கள், செய்தி ஊடகங்கள் போன்றவை இப்பிரச்சினையில் கூடிய கவனம் செலுத்தினால், பெண்கள் மத்தியில் இப்பிரச்சினை சம்பந்தமாக விழிப்புணர்வை ஏற்படுத்தமுடியும். ❊

# தலைவி நீ தலை நிமிர்!!!!



பெண்ணே! நீ உனது நிர்வாகத்தின் கீழுள்ள பகுதிகளுக்குத் தலைவி. உனது இலக்கை நீ சரியாக நிர்ணயிப்பதில் உன் நிர்வாகத்தின் திறன் தங்கியிருக்கிறது.

நீ ஒரு வியாபாரத்தை நடத்துகின்றாயென்றால், உனது இலாப இலக்கை நீ நிர்ணயிக்கும்போது~ நீ எய்தமுடியாத இலக்கையோ, நீ ஏற்கனவே அடைந்த இலாபத்தையோ, அடுத்த வருட இலக்காகக் கொள்ளக்கூடாது. இந்த வருடத்தைவிட அடுத்தவருடம் கூடிய இலாபத்தை இலக்காகக் கொள்ள வேண்டும். அதற்காகப் பெறமுடியாத இலாபத் தொகையொன்றையும் இலக்காக்கக்கூடாது.

அதேபோல், நீ பணிபுரியும் வேறு நிறுவனங்களிலும் உனக்கென ஓர் இலக்கை ஏற்படுத்திக்கொண்டு அதை எட்ட முயற்சி செய்யவேண்டும்.

அதாவது, எப்பொழுதும் நீ எய்திய இலாபத்தைவிடக் குறையாமலிருக்கவும்~ மேலும் உற்சாகத்துடன் முன்னேறவும், அதைவிடக்கூடிய இலக்கொன்றை ஏற்படுத்தவேண்டும். அதேவேளை, அடையமுடியாத இலக்கொன்றை ஏற்படுத்தும்போது~ அதை அடையமுடியாது என்று தெரிந்துகொண்டே ஏற்படுத்தினால், அதை அடைய மாட்டோமென்ற எண்ணமே எம்மை உற்சாகத்துடன் செயற்படவிடாது. அதீத ஆசையால் அந்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டால்~ அதை அடையமுடியாது போகும்போது, மிகுந்த மனவேதனை ஏற்படும்.

நீ உனது பிள்ளைகளின் கல்வி குறித்து ஓர் இலக்கை ஏற்படுத்துகிறாய். வியாபாரத்தையும், அலுவலகத்தையும் பற்றிக் கூறிவிட்டு பிள்ளைகளின் கல்வி பற்றிக் கூறுகிறேனென்று சிந்திக்கிறாயா? நீ. உன் வீட்டின் தலைவி. நீதான் அதை நிர்வகிக்கிறாய். அந்த நிர்வாகத்துக்கும் இலக்குகளிருக்க வேண்டும். எமது பாரம்பரியக் கனவுகளான டாக்டர், எஞ்சினியர் என்று கண்ணைமூடிக்கொண்டு இலக்குகளை ஏற்படுத்தாதே. அது உன்னையும் உன் பிள்ளைகளின் எதிர்காலத்தையும் பாதிக்கும்.

உன் பிள்ளைகளைக் கவனி. அவர்களின் திறமைகளை நிதானமாக அவதானித்து வா. அவர்கள் திறமையாயுள்ள துறைகளைத் தேர்ந்தெடுத்து, இலக்குகளைத் தீர்மானித்துக்கொள். அப்படி நிர்ணயிக்கும் இலக்குகளைத் தான் இலகுவில் எட்டலாம்.

உனது வீட்டை உனது வருமானத்தில் புதுப்பிக்கலாமா, பெருப்பிக்கலாமா என்று சிந்தித்து~ அதற்கேற்றபடி தீர்மானம் எடுப்பதுதான் புத்திசாலித்தனம். சிலர் ஒரு பெரிய வீடுகட்ட அத்திவாரம் போடுவார்கள். வீடுகட்டுப்படாமல் அத்திவாரத்துடனேயே நின்றுவிடும்.

சிலர் சிறிய வீடொன்றை இரண்டு அறைகளுடன் ஆரம்பித்து, வருடாந்தம் திட்டமிட்டுப் படிப்படியாகக் கட்டி முழுமையான அழகிய வீடாக்கிவிடுவார்கள்.

வீடு கட்டுவது என்ற இலக்கை ஏற்படுத்தி அதைத் திட்டமிட்டுப் படிப்படியாக அவர்கள் நிறைவேற்றும் திறமையை நீ அவதானிக்க வேண்டும். இலக்கைத் தமக்கு இயலக்கூடியதாக அமைத்த அவர்கள், அதை அடைய ஒரு திட்டத்தைத் தயாரித்து, அதை நடைமுறைப்படுத்தி, இறுதியாக வீட்டைக் கட்டி முடிக்கிறார்கள்.

எனவே ~ இலக்கை அடைய அதற்கேற்றவகையில் திட்டமிடவேண்டும். அதிலேதான் இலக்கை அடையும் வெற்றியின் இரகசியம் இருக்கிறது. அடுத்துத் திட்டமிடுவது பற்றிப்பார்ப்போம்.

**யோகேஸ்வரி சிவப்பிரகாசம்**


# பெண்ணாகி வந்த பூங்காற்று

**கோகிலா மகேந்திரன்**

(சென்றவாரத் தொடர்ச்சி....)

## சமூகத்தில் பெண்களின் நிலை

எமது சமூகத்தில் ஆண்கள் பொதுவாக வேலை, குடும்பம் ஆகிய இருநிலைகளிலும் திருப்தியைப் பெறுகிறார்கள். ஆனால், பெரும்பாலான பெண்கள் குடும்பத்தில் மட்டுமே திருப்தியைப் பெறவேண்டிய நிலையுள்ளது. பிள்



ளைகளை வளர்ப்பதும், வீட்டைப் பராமரிப்பதும் நிறையவே சலிப்பையும், மனச்சோர்வையும் தருகின்ற விடயங்கள். அவற்றில் பெரும்பகுதியை அல்லது முழுவதையுமே பெண்கள் செய்யவேண்டியிருக்கிறது.

பெண்கள் பொதுவாகக் குழந்தைபெற்று வளர்க்கும் இயந்திரங்களாகவே கருதப்படுகிறார்கள். அவர்கள் இயல்பாகவே நோயாளிகள் என்றும், பாரிய வேலைகள் அல்லது பொறுப்பான வேலைகள் எதுவும் செய்ய லாயக்கற்றவர்கள் என்றும் கருதப்படுகிறது. அவளிடத்தில் மன அழுத்தம் காரணமாக ஏற்படுகிற பதகளிப்புநிலை எப்போதும் 'ஹிஸ்டீரியா' என்றே பார்க்கப்படுகிறது. 'ஹிஸ்டீரியா' ஆண்களுக்கும்வரும் என்பது பலருக்குத் தெரியாது.

'வீட்டுப்பெண்' என்ற பாத்திரத்தை ஒரு மனைவி ஏற்கும் போது, அந்தப் பாத்திரத்தின் பங்குப்பணி எப்போதும் மறைபொருளாகவே இருக்கிறது. அது ஒரு தெளிவான கட்ட மைப்பைக் கொண்டிருப்பதில்லை. சமைத்தல், வீட்டிலுள் ளோருக்கு நோய் வரும்போது பராமரித்தல், குழந்தையைக் கவனித்தல், உடுப்புத்தோய்த்தல், மினுக்குதல், பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தல், வீட்டையும், வளவையும் துப்பரவுசெய்தல், கணக்குகளைப் பேணுதல் போன்ற பல வேலைகளையும் வெளியே இருந்து ஒருவரைக் கொண்டு செய்வதாயின், எவ்வளவு கூலிகொடுக்க வேண்டியிருக்கும் என்பதைக் கணக்குப் போட்டுப் பார்த்தால் - ஒரு பெண் செய்யும் வேலையின் பெறுமதி புரியும். ஆயினும், எந்தவிதப் பிரதியுபகாரமும் எதிர்பார்க்காமல் இவற்றையெல்லாம் அவள் செய்ய வேண்டும் என்றே குடும்பம் எதிர்பார்க்கின்றது. அதே நேரத்தில், குடும்பம் ஒன்று அவளிடம் எதிர்பார்க்கும் விடயங்கள் எவை என்பது பொதுவாகத் தெளிவற்றதாகவும், குழப்பம் உடையதாகவுமே இருக்கிறது என்பதும் கவனத்தில் கொள்ளவேண்டிய விடயம். குடும்பத்தில் அவளது கடமைக் கூறுகள் தெளிவாக வரையறுக்கப்பட்டு, அதற்கான சம்பளத்தைக் குடும்பம் அவள் கையில் கொடுப்பது- அவளது சுயகௌரவத்தையும், சுயவிருப்பத்தையும் உயர்த்த உதவலாம்.

உலகம் முழுவதிலும் எடுத்துப் பார்த்தால், பெண்கள் தொலைக்காட்சி பார்க்கும் நேரம் - ஆண்களைவிடக் குறைவாக இருப்பதும், பெண்கள் சாப்பிடும் நேரங்கூட ஆண்களை விடக் குறைவாக இருப்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது. பெண்கள் மென்மையானவர்கள், அன்பானவர்கள் என்ற போர்வையில் வீட்டிலுள்ள வயதானவர்களைக் கவனிக்கும் பணி அவர்களிடமே விடப்படுகிறது. பல சந்தர்ப்பங்களில்- அவர்களுக்குக் குளிப்பாட்டுவது, உடைமாற்றுவது, உணவூட்டுவது, மலசலம் எடுப்பது போன்ற வேலைகளை வருடக் கணக்கில் செய்ய வேண்டி இருப்பது மிகவும் சலிப்பைத் தரக்கூடிய விடயம். வைத்தியசாலைகளிலும்கூட நோயாளர்களை இந்த முறையில் பராமரித்தல் பெருமளவுக்குப் பெண் தாதிய உத்தியோகத்தரிடமே கையளிக்கப்பட்டிருத்தல் நோக்குதற்குரியது.

பெண் வேலைக்குப் போதலை இப்போது பல குடும்பங்களிலும் ஏற்றுக்கொள்கிறார்கள். ஆயினும், வேலை செய்தல் ஆணுக்குத் தருகிற நிறைவைப் பெண்ணுக்குத் தருவதில்லை. ஏனெனில்- வீட்டுச்சுமையும், வேலைச்சுமையுமாக அவள் இரட்டைச் சுமையைத் தாங்குகிறாள். அதனால், வேலைத்தலங்களில் பொறுப்பான பதவிகளைப் பொறுப்பேற்கத் தயங்குகிறாள். வேலை என்பது பெண்களுக்கு நிறைவைத் தர வேண்டுமாயின் வீட்டுப்பொறுப்புகள் ஆணுக்கும், பெண்ணுக்குமிடையே சமமாகப் பங்கிடப்படவேண்டும்.

பெண்ணோடும், பெண்ணின் உடலோடும் சார்ந்த பல விடயங்களின் கட்டுப்பாடு ஆண்கள் கையிலிருப்பது மற்றொரு வருத்தத்திற்குரிய விடயமாகும். பிள்ளையைக் கருப்பையில் தாங்கிப் பிரசவவேதனையை அனுபவித்துப் பின் அவர்களை வளர்த்தெடுப்பவள் பெண்ணாய் இருந்தபோதும், கருத்தரித்தல் தொடர்பான முடிவெடுத்தல் பெண்ணிடம் விடப்படுவதில்லை. கருத்தடை தொடர்பான சத்திரசிகிச்சை செய்துகொள்ளல் என்று முடிவெடுக்கப்பட்டாலும் அக்கருத்தடையைப் பெண்ணே செய்துகொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆயினும், கருத்தடை தொடர்பான எந்த நடைமுறை தொடர்பாகவும் முடிவெடுப்பவர் பெரும்பாலும் ஆணாகவே இருக்கிறார்.

கல்வி தொடர்பாகப் பெண்களுக்கு எல்லா வகையிலும் சமவுரிமை வழங்கப்பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆயினும், ஆசியப் பிராந்தியத்தில் 444 மில்லியன் பெண்கள் இன்னும் எழுத வாசிக்கத் தெரியாதவர்களாகவே இருக்கின்றனர் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. எமது நாட்டிலும் கலாநிதிப் பட்டம், பேராசிரியர் பட்டம் போன்ற மிக உயர் கல்வி நிலைகளில் பெண்களின் விகிதாசாரம் ஒப்பீட்டளவில் குறைவாகவே காணப்படுகிறது.

(தொடரும்....)

## கவிதைச்சோலை

### கடவுளின் முன்னே....!



நான் உன்னை நினைக்கிறேன்
நீ என்னை நினைக்கிறாயா?
இருவராய் சாலையில்
எவராவது போகையில்
மல்லிகைப்பூ மழலையை
அள்ளுகிற அம்மா பார்த்தால்

கலைந்த தலை சீவ
கண்ணாடி பார்க்கையில்

கடையில் பூ பார்த்து
என் குழல் கேட்கையில்

நின்று விட்ட கனவுகள்
என்றாவது எட்டிப்பார்க்கையில்

உறவுகள் முகங்களெல்லாம்
உள்ளம் பார்க்காமல்
உடல் மட்டும் விசாரிக்கையில்

என் கவிதைக் காகிதங்கள்
ரசிகன் தேடுகையில்

பாராட்டுச் சுகம் தேடி
பாவி மனசு அலைகையில்

விழியோரத் துளி நீர்
விரல் தேடி அழுகையில்

கவலையாய் என் வயசை
கணக்குப் போடுகையில்

கடவுளின் முன்னே
கைகூப்பி நிற்கையில்

நான் உன்னை நினைக்கிறேன்
நீ என்ன நினைக்கிறாயா?

இல்லாத காதலா...!
எப்போதும் எப்போதும்
நான் உன்னை நினைக்கிறேன்


எப்போதாவது எப்போதாவது
நீ என்னை நினைக்கிறாயா?

வர்ஷா

# பிள்ளைகளுக்கு சுதந்திரம் கொடுங்கள்; அதேநேரம் பொறுப்பும் வளரவேண்டும்!

## வாழ்வில் வளர்ச்சி நிலைகள்; அறிதலும் புரிந்துகொள்வதும்

அடுத்தது ஒருவரை அன்பு செய்யத் தொடங்கிய பின்பும், விவாகம் முடித்த பின்பும் கவர்ச்சி என்பது இல்லாமற் போவதில்லை. அழகான உருவத்தை, குரலைக் காணும் போது, ஒருவரது மனம் மற்றவரில் செல்லக்கூடும். ஆகவே



கவர்ச்சி என்பது அன்பில்லை. கண்டதும் அன்பு ஏற்படுவதில்லை. இது பொய். கண்டதும் கவர்ச்சி ஏற்படும். அடுத்தது - இத்தொடர்பு நீண்டுகொண்டு சென்றால் குதூகலம் ஏறபடும். - இதுவும் அன்பல்ல. உணர்வுக் குட்பட்டதே. இக்காலத்தில் பலர் கடிதம் எழுதுவர். ஆண் யார், பெண் யார் என்பதை அறிய எடுக்கும் உற்சாகமே இந்த நிலையில் ஏற்படும்.

இதைத்தாண்டித் தொடர்பை வளர்த்துக்கொண்டு சென்றால் கலவரப்படும் (Infatuation) நிலைக்குச்செல்வர். விசேடமாக ஆண் பிள்ளைக்கு அதிகமாக இருக்கும். சிலர் முதல் நிலையிலும், சிலர் இரண்டாவது நிலையிலும், சிலர் மூன்றாவது நிலையிலும் விவாகம் முடிப்பார்கள். தாம் அன்பு செய்வதாக நினைத்தே முடிப்பர். இந்த நிலையில் அன்பில்லை. இத்தொடர்பு நீண்டால் (Romance) என்ற நிலையை அடைவர். இதுவும் அன்பல்ல. உணர்வுக் குட்பட்ட நிலையே. அன்பு என்பது உணர்வல்ல. அன்பு ஏற்படப் பல நாட்கள் செல்லக்கூடும். அன்பு என்பது தீர்மானம், அர்ப்பணம், அதிஷ்டானம், பரித்தியாகம் செய்ய விருப்பம் போன்ற நிலையே. எனது மனைவியை அன்பு செய்கிறேன் என்பதன் அர்த்தம், எனது நன்மையைப்போல் அதைக் கருத்தில் கொண்டு மனைவியின் நன்மையையும் ஏற்றுக்கொள்ளும் நிலையாகும். எனது நன்மையைவிடக் குறைவாகவோ, கூடவோ நினைக்காது சமமாக நினைக்கும் நிலையில் செயற்படப் பழகியிருந்தால், நான் மனைவியை அன்பு செய்கிறேன் எனலாம். அவருக்காக வாழவோ, துன்பப்படவோ ஆயத்தமான நிலையாகும். விவாகத்தில் தெரிவு, அர்ப்பணம் ஏற்பட வேண்டும். அர்ப்பணம் என்பது மற்றவருக்காக வாழ்வது.

இளைஞர்கள், இளம்பெண்கள் மத்தியில் உயர்ந்த நோக்கமுள்ள கற்பனையான சமுதாயத்தை உருவாக்க ஆசை ஏற்படும். பேதமில்லா, வைராக்கியமில்லா சமாதானமான சமுதாயத்தை உருவாக்க ஆசை ஏற்படும். நல்ல நோக்கத்தோடு இதைச் செய்ய ஆசைப்படுவர். இந்த ஆசை ஏற்படும்போது அப்படிச் செயற்படுவர். போராடுபவரில் பெரிய உந்துதல் ஏற்படும். பெரும்பாலும் இப்படிச் செயற்படும் தலைவர்களிலும் பல வீனங்கள் உண்டு. ஆகவே யதார்த்தத்தை உணர்ந்தே நெருங்கவேண்டும். சமுதாயச் சேவையில் இவர்களைப் பழக்க வேண்டும். விளையாட்டில் உள்ளாக்க வேண்டும். மற்றவர்களுக்காக வாழப்பழக்க வேண்டும்.

இளைஞர், இளம்பெண்களைப் பெரியோர் புரிந்து கொள்பவர்களாக இருக்கவேண்டும். அவர்களுக்கு ஏற்படும் மோதல், பிரச்சினை போன்றவற்றைப் புரிந்து கொள்ளவேண்டும். ஒருவரில், அவர்களது மனம் சென்றால் அவரிடம் ஆலோசனைபெற ஓடிவருவர். இன்று அப்படிப்பட்டவர்கள் குறைவு. பெற்றோரிடம் ஆலோசனை பெறுவதே சிறந்தது. சில பெற்றோருடன் கதைக்கவும் முடியாதநிலை இருக்கும்.

இந்த வயதுக்குட்பட்டவர்களுக்குச் செய்யும் பெரிய உதவி என்னவென்றால், அதிகமதிகமாக முதிர்ந்த மனமுதிர்ச்சி நிலைக்குச் செல்ல உதவுவதே ஆகும்.

அவர்களுக்குச் சுதந்திரம் கொடுக்க வேண்டும். அதே போன்று, பொறுப்பும் கொடுக்க வேண்டும். சூழலை அழகுபடுத்தப் பொறுப்புக் கொடுக்க வேண்டும். சுயாதீனமாகத் தீர்மானம் எடுக்க உதவவேண்டும்.

இளமைப்பருவம் என்பது- சிலருக்கு நீண்டதாகவும், சிலருக்குக் குறுகியதாகவும் இருக்கும். மனமுதிர்ச்சி அடைநதவர்க்கே திருமணம் முடித்துக்கொடுப்பது நன்று. மற்றவருடன் நல்ல தொடர்பை ஏற்படுத்த உதவவேண்டும். தொழில், திருமணம் போன்றவற்றைத் தெரிவுசெய்யும்போது யதார்த்தத்திற்கேற்பத் தெரிவுசெய்யப் பெற்றோர் பிள்ளைகளுக்கு உதவவேண்டும். பெற்றோர் தமக்குத் தேவையான தொழிலைச் செய்யவும், தமது விருப்பத்தை நிறைவேற்றவுமே உற்சாகப்படுவர்.

விரும்பும் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள அதாவது- தனிமையாக வாழவோ, குடும்பமாக வாழவோ, துறவியாகவோ வாழ்வதற்குத் தீர்மானம் எடுக்க உதவவேண்டும். சிலர் துறவியாக வாழவிரும்புவர். ஆனால், அவர்களின் நோக்கம் பிழையாக இருக்கலாம். இதைத் தேடிப்பார்த்துச் சரியான தீர்மானம் எடுக்க உதவவேண்டும். சிலர், சில நோயினால் அல்லது வேறுசில காரணங்களால் தனியே வாழத் தீர்மானம் எடுப்பர். குடும்ப வாழ்வோ, தனிவாழ்வோ, துறவற வாழ்வோ எதுவானாலும் அதை நாம் ஏற்க வேண்டும். ஏற்றுச் சரியான தீர்மானம் எடுத்து உதவ வேண்டும்.

(முற்றும்)

எஸ்.ஜே.யோகராசா
உளவளத்துணை ஆலோசகர்

# பாலாவைச் சந்திக்க ஏற்பாடு செய்யுங்கள்; முஸ்லிம் எம்.பிக்கள் ஒன்றியம் கோரிக்கை!

## நோர்வே தூதுவர் வெஸ்பேர்க்கிடம் கேட்டனர்

முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம், நேற்று முன் தினம் நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க்கைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியது.

ஜப்பானில் நடைபெறவுள்ள அடுத்தசுற்றுப் பேச்சுக்களுக்கு முன்னதாகப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேச்சு நடத்த ஏற்பாடு செய்துதருமாறு நோர்வேத் தூதுவரிடம் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர்.

பேச்சுக்களில் முஸ்லிம்களின் சார்பில் தனியான பிரதிநிதிகள் இடம்பெறவேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காகவே, புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடன் பேச்சு நடத்தவிருப்பதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இச்சந்திப்பில் முஸ்லிம் காங்கிரஸ், தேசிய ஐக்கிய முன்னணி உள்ளிட்ட கட்சிகளைச் சேர்ந்த 15 முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்க கட்டுரைப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் நடாத்திய கட்டுரைப் போட்டியின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

இப்போட்டியில் வெற்றியீட்டியோரின் விபரங்கள் வருமாறு:-

1 ஆம் இடம் - க.கலையரசி (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), 2 ஆம் இடம் - அ.நிசாந்தன் (யாழ்.இந்துக் கல்லூரி), 3 ஆம் இடம் -ந.அருட்செல்வி (நெல்லியடி மகாவித்தியாலயம்), 4 ஆம் இடம் -யோ.முரளிதரன் (கிளி நொச்சி இந்துக்கல்லூரி), 5 ஆம் இடம்- இருவர் பெற்றுள்ளனர். சி.துமிஷன் (யாழ்.இந்துக்கல்லூரி), த.கயந்தினி (மானிப்பாய் மகளிர் கல்லூரி) 7 ஆம் இடம்- இ.சோபனா (நெல்லியடி மகாவித்தியாலயம்), 8 ஆம் இடம் - சி.சங்கீதா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), 9 ஆம் இடம் - க.சிவதாரணி (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), 10 ஆம் இடம்- சி.கலைப் பிரியா (முரசுமோட்டை முருகானந்தா வித்தியாலயம்)

இப்போட்டியின் 2 ஆவது கட்டப் போட்டியானது- எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில்- சென்ஜோன்ஸ் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், யாழ்.இந்துக்கல்லூரி, கிளிநொச்சி இந்துக் கல்லூரி, கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி, இளவாலை ஹென்றியரசர் கல்லூரி, முரசுமோட்டை முருகானந்தா வித்தியாலயம் என்பன பங்குபற்றவுள்ளன.

## பொதுக்கூட்டம்

(நவிண்டில்)

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் 17 ஆவது ஆண்டு நிறைவுப் பொதுக் கூட்டம் எதிர் வரும் 18 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக கழகச் செயலாளர் அறிவித்துள்ளார். (116)



கலாபூஷணம் விருதுபெற்ற தேவாரப் பண்ணிசை ஓதுவார் மூர்த்தி கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தனுக்கு கந்தர்மடம் வட மேற்கு கிராம அபிவிருத்திச்சங்கம் பாராட்டுவிழா நடத்திய போது, வைத்திய கலாநிதி யோகேஸ்வரன் உரையாற்றுவதையும், நிகழ்வுக்குத் தலைமை வகித்த க.சிவராமலிங்கம், ஸ்ரீமத் சோமஸ்கந்தவேள் சுவாமிகள், கலாபூஷணம் திருஞானசம்பந்தன், அவரது பாரியார் தி.வரதலட்சுமி ஆகியோர் அமர்ந்திருப்பதையும் காணலாம்.

# சிறந்த விமானப் படையினருக்கு கொழும்பில் விருதுகள் வழங்கப்பட்டன!

(கொழும்பு)

இலங்கை விமானப்படையில் சிறப்பாகப் பணியாற்றியவர்களுக்கான விருது வழங்கும்விழா நேற்று முன்தினம் பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெற்றது.

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தலைமையில் நடந்த இந்த விழாவில், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, விமானப்படைத் தளபதி எயர் வைஸ் மார்ஷல் டொனால்ட் பெரேரா உள்ளிட்ட படையுயரதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

விமானப்படையில் சிறப்பாகப் பணியாற்றியோருக்கு இந்த நிகழ்வில் பதக்கங்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

# முக்கிய அறிவித்தல்

## பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) பளை
## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான கிளைப்பொதுச்சபைக்
## கூட்ட அறிவித்தல் - 2003

மேற்படி சங்கத்தின் கிளைகளுக்கான கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் கீழ்க்குறிப்பிட்ட விபரப்படி நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

**திகதி: 22.03.2003 சனிக்கிழமை**
**நேரம்: முற்பகல் 10.00 மணி**

| தொடர் இல. | கிளைஇல. | கிளையின் பெயர் | கிளைப் பொதுக்கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 01 | 01 | பளை | தலைமைச் செயலகம், பளை |
| 02 | 02 | மாசார் | மாசார் கிளை நிலையம் |
| 03 | 03 | முள்ளிப்பற்று | கிளி/இயக்கச்சி அ.த.க பாடசாலை, இயக்கச்சி |
| 04 | 04 | சோரன்பற்று | கிளி/சோரன்பற்று கணேசாவித்தியாலயம், சோரன்பற்று |
| 05 | 05 | புலோப்பளை | கிளி/புலோப்பளை றோ.க.த.க.பாடசாலை, புலோப்பளை |
| 06 | 06 | இத்தாவில் | கிளி/வேம்பொடுகேணி சி.சி.த.க.பாடசாலை, பளை |
| 07 | 10 | புலோப்பளை கிழக்கு | கிளி/புலோப்பளை றோ.க.த.க.பாடசாலை, புலோப்பளை |
| 08 | 11 | அல்லிப்பளை | கிளி/புலோப்பளை றோ.க.த.க.பாடசாலை, புலோப்பளை |
| 09 | 12 | கச்சார்வெளி | தலைமைச் செயலகம், பளை |
| 10 | 13 | தம்பகாமம் | தலைமைச் செயலகம், பளை |
| 11 | 14 | சங்கத்தார்வயல் | கிளி/இயக்கச்சி அ.த.க.பாடசாலை, இயக்கச்சி |

**திகதி: 23.03.2003 ஞாயிற்றுக்கிழமை**
**நேரம்: முற்பகல் 10.00 மணி**

| தொடர் இல. | கிளைஇல. | கிளையின் பெயர் | கிளைப் பொதுக்கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 01 | 07 | முகமாலை | கோண்டாவில் கிளைநிலையம் |
| 02 | 09 | கிளாலி | மிருசுவில் உபதபால் அலுவலகக் கட்டடத்திற்கு அருகாமையிலுள்ள கட்டடம் |

குறிப்பு: (1) இக்கிளைக் குழுக்கள் தெரிவு சம்பந்தமான மேலதிக விபரங்களைச் சங்கத்தின் தலைமை அலுவலகத்திலும், சம்பந்தப்பட்ட கிளை நிலையங்களிலும் பார்வையிடலாம்.

(2) சங்கத்தின் வாக்களிக்கத் தகுதியுள்ள அங்கத்தவர்கள் பூரணமாக மீளக்குடியமராத காரணத்தால் தனித்தனி அறிவித்தல் வழங்கப்படவில்லை. எனினும் சம்பந்தப்பட்ட கிளைகளிலும், தலைமை அலுவலகத்திலும் பொது அறிவித்தல் மூலமாக இது சம்பந்தமான விபரங்களைப் பார்வையிடலாம்.

*சி.சுந்தரலிங்கம்,*
*தலைவர்.*

*பொ.வதனி,*
*செயலாளர்,*
*பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ. சங்கம்,*
*பளை.*
*12.03.2003*

சி/674

# சின்னஞ்சிறு செய்திகள்

## சாரதி அனுமதிப்பத்திர செய்முறைப் பரீட்சை திகதிகளில் மாற்றம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு செயலகத்தில் இன்று நடைபெறவுள்ள நடமாடும் சேவையொன்றில் மோட்டார் வாகனப் பரிசோதகர் சமூகமளிக்க வேண்டியுள்ளதால் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருந்த சாரதி அனுமதிப்பத்திரப் பரீட்சைத் திகதிகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இத்திணைக்களத்தில் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு செயல்முறைப் பரீட்சைக்குப 18 ஆம் திகதிவரை திகதிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகள் - தங்கள் செயல்முறைக்கான மாற்றுத் திகதியை எதிர்வரும் 19 ஆம் திகதி தொடக்கம் இத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளுமாறு மோட்டார் திணைக்கள அதிகாரி அறிவித்துள்ளார்.

## கோப்பாய் பிரதேச செயலக விளையாட்டுவிழா

கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான தடகள விளையாட்டுப் போட்டி - எதிர்வரும் 18 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பங்குபற்ற விரும்பும் கழக அங்கத்தவர்கள் தமது பெயர் விபரங்களை 18 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கும்படி கோப்பாய் பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

## மரவேலைப் பயிற்சிப் பாடசாலைக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தின்கீழ் இயங்கும் அரச இயந்திர சாதன மரவேலைப் பயிற்சிப் பாடசாலைக்குப் பயிற்சியாளர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பயிற்சி நெறிக்கு 14 முதல் 30 வயதுக்கு இடைப்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.பயிற்சிக் காலத்தில் நாள் ஒன்றிற்கு 30 ரூபா ஊக்குவிப்புப் பணமாக வழங்கப்படுவதுடன், வேலை செய்யும் கூலியில் 80 வீத இலாபப் பணமும் வழங்கப்படும்.

விண்ணப்பிக்க விரும்புவோர்- விண்ணப்பப்படிவத்தை சுயமாகத் தயாரித்து, எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னதாக- பிரதேச செயலர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

# உயர்தரப் பரீட்சை மாணவர்களுக்கு சவாலாக எழுந்துள்ள உலகக்கிண்ணம்!







அந்த நாளைத்தான் உலகின் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அது மட்டுமா? அதற்கு அடுத்த நாள் திருவிழா தொடக்கம் அல்லவா. திருவிழா என்றால் கொடியேற்றமும் இடம்பெற வேண்டும் இதுதானே எமது ஊர் வழக்கம். யாழ்.குடாநாட்டிலும் அநேக வீடுகளில் இந்தக் கொடிக்கம்பங்கள் அவசர அவசரமாகச் சீர்செய்யப்பட்டன. 2003 ஆம் ஆண்டு மாசி மாதம் 08 ஆம் திகதிதான் அந்தநாள். அந்த நாளும் வந்தது. அடுத்த தினம் தொடங்கவிருக்கும் திருவிழாவுக்கான கலைநிகழ்வும், வாணவேடிக்கைகளும் கண்கொள்ளாக் காட்சியாகத்தான் இருந்தன. நாளை விடிந்தால் திருவிழா தொடங்கிவிடும். திருவிழாவும் ஒரு நாள், இரு நாள் அல்லவே. இரண்டு மாதங்கள் தொடரப்போகும் திருவிழா அல்லவா.

தவழும் குழந்தை முதல் தள்ளாடும் முதியவர்வரை- வைத்த கண் வாங்காமல் இப்பொழுது முதல் திருவிழாவில் நன்கு மூழ்கிவிட்டனர். ஆம். அது என்ன திருவிழா? அதுதான் 8 ஆவது உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டி. யாழ்ப்பாணத்தில் தற்பொழுது 24 மணிநேரமும் உள்ள மின்சார வசதி, அதிகரித்த தொலைக்காட்சிப் பாவனை, அலைவரிசைகள், நேரடி ஒளிபரப்புகள் என்பன தற்பொழுது யாழ்ப்பாணத்தில் இந்த கிரிக்கெட் போட்டிகளைக் கண்டு களிப்போரின் எண்ணிக்கையைச் சடுதியாக உயர்த்தியுள்ளன என்பது என்னவோ மறுக்கமுடியாத உண்மைதான்.

ஈழத்தமிழ் மக்களைப் பொறுத்தவரை அன்று தொட்டு இன்றுவரை (அன்றையநிலை இன்று இல்லாவிட்டாலும்) அவர்கள் உயிரென மதிப்பது கல்வியைத்தான். இதனாலேயே, அன்றைய சிங்கள இனவாதிகள் தமிழர்களின் கல்வி மூலங்களை அழிப்பதற்கு முனைந்து நின்றார்கள். இதற்குச் சிறந்த உதாரணங்களாக யாழ்.நூலக எரிப்பு, பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி நூலக எரிப்பு என்பவற்றைக் குறிப்பிடமுடியும்.

அத்துடன், அரசபணிகளில் தமிழர்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைப்பதற்கு தனிச்சிங்களச் சட்டமும்; உயர்கல்வி வாய்ப்புகளில் தமிழர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு விகிதாசாரா பிரதிநிதித்துவமுறையும் கொண்டுவரப்பட்டன. இதனால் - தமிழர்கள் பாதிப்படைந்தனர் என்பதும், இன்றைய இனப்பிரச்சினையின் அடிப்படை அம்சங்களில் இதுவும் ஒன்று என்பதும் அனைவரும் அறிந்த விடயம்.

பின்வந்த காலங்களில், தமிழரின் உரிமைப்போர் ஆயுதப் போராட்டமாகப் பரிணமித்த பின்னரும், தமிழரின் கல்விக்குப் பல தடைகள் போடப்பட்டன. எரிபொருள் மீதான தடை, மின்சார வசதியின்மை, நவீன ஆய்வுகூட வசதியின்மை, ஆய்வுகூட இரசாயனப் பொருட்கள் மீதான தடை, பாடநூல்கள் இன்மை, தொடர்



செய்திக் கட்டுரை

குண்டுவீச்சுக்கள் எனப் பல தடைகள் விதிக்கப்பட்டன.


இறுதியாக - இன்றும்கூட களியாட்டங்கள், சினிமாக்கள், மதுபான இறக்குமதி, போதைப்பொருள் பாவனை என்பவற்றின்மூலம் எமது இளம் சந்ததியினரைத் திசைதிருப்ப முயற்சிகள் திரைமறைவில் அரங்கேறியுள்ளன. ஆயினும், இவற்றுக்கு மத்தியில் எமது மாணவர்கள் சிலிர்த்தெழுந்து கல்வியைக் கண்ணெனக் காப்பார்களாயின், அது போற்றுதற்குரியது. இருந்தபொழுதும் - தற்பொழுது எமது கல்வித்தரம் வீழ்ச்சியைக் காட்டி நிற்கின்றது என்பதைப் புள்ளிவிபரங்கள் எடுத்துக்காட்டத் தவறவில்லை.

இந்நிலையில், தற்பொழுது ஆரம்பித்துள்ள கிரிக்கெட் திருவிழாவில் மாணவர்கள், மாணவியர் அதிக ஆர்வங்காட்டி வருவதும் - தொலைக்காட்சிப்பெட்டிக்கு முன் தம்மை மறந்து அதிகநேரம் செலவிடுவதும் - என்னவோ உண்மைதான்.

எமது மாணவர்களைப் பொறுத்தவரை உயர்கல்விப் படிமுறையில் மிக முக்கிய கட்டம் உயர்தரப் பரீட்சை ஆகும். இந்தப் பரீட்சையே அவர்களது வாழ்வைத் தீர்மானிக்கும் பரீட்சை என்றால்கூட அது மிகையில்லை.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடுப்பகுதியில் இவ்வாண்டுக்கான உயர்தரப்பரீட்சைகள் ஆரம்பமாகப் போகின்றன. இதற்காக மாணவர்கள் தங்களை ஆயத்தஞ்செய்கின்ற காலம் இந்த ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்கள் ஆகும்.

ஆயினும், 8 ஆவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியோ பெப்ரவரி 9 ஆம் திகதி தொடக்கம் மார்ச் 23 ஆம் திகதிவரை கிட்டத்தட்ட 2 மாதங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இந்நிலையில், உயர்தரப் பரீட்சைக்கு ஆயத்தம் செய்யும் மாணவர்கள் பலர் - பொழுதுபோக்க வழியற்றவர்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்த கிரிக்கெட் ஆட்டத்தினைக் கண்டு களிப்பதில் தம்மைப் பல மணித்தியாலங்களாக ஈடுபடுத்திக் கொள்வதானது, அவர்களது உயர்தரப் பரீட்சைக்கான ஆயத்தங்களில் பாதிப்பினை உண்டு பண்ணியுள்ளது என்பது உண்மைதான்.



மரநிழலிலும், குப்பி விளக்கிலும், பதுங்கு குழிகளிலும் கல்வி கற்றுப் பல்கலைக்கழகம் சென்ற எமது மாணவர்களுக்கு, தற்பொழுது கிடைக்கும் வசதிகள் எமது கல்விக்குத் தடைக்கற்களாக அமைவது வேதனைக்குரியதாகும், கல்வியை உயிரென மதிக்கும் எமக்கு இந்த நிலைமை ஒன்றும் நல்லதல்ல.

எனவே, எமது மாணவர்களது பரீட்சைக்கான ஆயத்தங்கள் பாதிப்படைந்துள்ள நிலையில் பெற்றோர்கள், ஆசிரியர்களின் பங்கு இங்கு மேலெழுந்து நிற்கின்றது. ஆகவே, பரீட்சைக்கு ஆயத்தம் செய்யும் மாணவர்களுக்குத் தேவையான எல்லாவற்றையும் செய்வது பெற்றோர்கள், ஆசிரியர்களின் கடமையாகின்றது. இதனை விடுத்துப் பெற்றோர்கள் தாமும் தொலைக்காட்சிக்கு முன்னிருந்துகொண்டு பிள்ளைகளை மட்டும் நீ போய்ப்படி என விரட்டுவது எந்த விதத்திலும் பயன் தரப்போவதில்லை.

அவர்கள் உயர்ந்த பெறுபேற்றைப் பெற வழிவகுக்கப்போவதுமில்லை. எனவே - பெற்றோர்; ஆசிரியர்கள் இக்காலத்தில் மாணவர்களுக்கு முன்மாதிரியாக விளங்க வேண்டியது மிகமிக அவசியமாகின்றது.

மாணவர்கள், தமது எதிர்கால வாழ்வினைத் தீர்மானிக்கும் இப்பரீட்சைக்கான இலக்கினை நோக்கிய நேரிய பார்வையுடன் அக்கம் பக்கங்களுக்குத் தம்து பார்வையைச் சிதறவிடாமல் கருமமே கண்ணாக இருக்கவேண்டும். எது எப்படியோ வரப்போகும் உயர்தரப்பரீட்சைப் பெறுபேறுகளில், உலகக் கிண்ணக் கிரிக்கெட்டும் எமது மாணவர்களின் பெறுபேறுகள் பாதிப்பைக் காட்டும் ஒரு காரணியே கசப்பான உண்மை.

நாம் உயிரென மதிக்கும் கல்வியை மாணவர்கள் உணர்ந்து-பொறுப்புடனும், அக்கறையுடனும் கற்கும்பொழுது இந்நிலை மாறக் கூடும். ★

இயே. ஜெயசுதன்

# அதிர்ஷ்ட வாரம்

**14.03.2003 - 20.03.2003**

## மேடம்

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

தொழில் முன்னேற்றமுண்டு, பிரயாணத்தால் நன்மைகள் கிடைக்கும், விவாக சுபகாரியங்களில் வெற்றி கிடைக்கும், பொருளாதார நிலை திருப்திகரமாக இராது, இருப்பினும் பாதிப்பில்லை, நண்பர்கள், உறவினர்களின் உதவிகள் இருக்கும், வியாபாரிகள் அதிக முதலீட்டைத் தவிர்ப்பது நல்லது, நஷ்டம் வராது, இருப்பினும் அதிக இலாபத்தை எதிர்பார்க்க முடியாது, பெண்களுக்கு பொருள் வரவுக்கு இடமுண்டு, மாணவர்களுக்குக் கல்வியில் நல்ல முன்னேற்றமுண்டு.

## இடபம்

**கார்த்திகை 2,3,4 ஆம் பாதம், ரோகிணீ, மிருகசீரீடம், 1,2ஆம் பாதம்**

தொழிற்துறையில் நல்ல முன்னேற்றம் இராது, தேக ஆரோக்கியம் பாதிக்கப்படும், பிரயாணக் கஷ்டமுண்டு, விவாக முயற்சிகள் தடைப்படும், பலவித கஷ்டங்களையும், யோசனையையும் கொடுக்கும், பொருளாதார நிலை சீராக இராது, பணப்பற்றாக்குறை இருக்கும், வியாபாரிகள் அதிக இலாபத்தை எதிர்பார்க்க முடியாது, போட்டி அதிகமாக இருக்கும், பெண்களுக்கு மனதில் அமைதி இராது, குடும்பத்தில் குழப்பமான நிலை காணப்படும், மாணவர்கள் உற்சாகமின்றிக் காணப்படுவர்.

## மிதுனம்

**மிருகசீரீடம், 2,3 ஆம் பாதம் திருவாதிரை, புனர்பூசம், 1,2, 3 ஆம் பாதம்**

எடுத்த காரியத்தில் நல்ல வெற்றி கிடைக்கும், பெரியோர் மதிப்பும் தொழிலில் நல்ல பேரும் புகழும் கிடைக்கும், வாகனம் நன்மை தரும், பொருளாதார நிலை சீராக இருக்கும், வெளியூரிலிருந்து உதவிகள் கிடைக்கும், குடும்ப சுகமுண்டு, வியாபாரிகள் புதிய முதலீடுகளில் ஆர்வம் காட்டுவர், நல்ல இலாபம் கிடைக்கும், பெண்களுக்கு களஸ்திர புத்திர மகிழ்ச்சி உண்டு, குடும்பத்தில் சந்தோஷமான நிலை இருக்கும், மாணவர்கள் கல்வியில் அதிக முன்னேற்றமுண்டு.

## கர்க்கடகம்

**புனர்பூசம், 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

தேகசுகம் பாதிக்கப்படும், மனதில் குழப்பமும் வேதனையும் இருக்கும், தொழில் சமநிலையாக இருக்கும், ஏமாற்றம், மனப்பயம், போன்றன இருக்கும், திருமண வாய்ப்புக்கள் தாமதமாகும் அல்லது குழப்பத்தைக் கொடுக்கும், வியாபாரிகள் அவதானமாக இருப்பது நல்லது, ஏமாற்றப்படக் கூடும், எதிர்பாராத நஷ்டம் ஏற்படலாம், பெண்களுக்குத் தேகசுகம் நல்ல நிலையில் இராது, அடிக்கடி நாரி நோவு, வயிற்றுவலி இருக்கும், மாணவர்களுக்கு நல்ல முன்னேற்றமான காலம்.

## சிங்கம்

**மகம், பூசம், உத்தரம், 1ஆம் பாதம்**

அதிக பிரயாசைகளையும், அதற்குரிய நல்ல பலனையும் கொடுக்கும், எடுத்த காரியத்தில் வெற்றி கிடைக்கும் இருப்பினும் பொருளாதார நிலை நல்லதாக இராது, வரவுக்கு அதிகமான செலவுகள் காத்திருக்கும் இருப்பினும் உதவிகள் கிடைக்கும், விவாக முயற்சிகள் நல்ல பலனைத் தரும், வியாபாரிகள் இலாபத்தை எதிர்பார்க்கலாம், அதிக முதலீடு செய்யலாம், பெண்களுக்குக் குடும்பசுகம், சந்தோஷம் உண்டு, மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றமடையும்.

## கன்னி

**உத்தரம், 2,3,4 ஆம் பாதம், அத்தம், சித்திரை, 1,2ஆம் பாதம்**

தொழிற்சிறப்பு உண்டு, பொருளாதாரநிலை சமனாக இருக்கும், பிரயாணத்தால் நன்மை கிடைக்கும், விவாக முயற்சிகள் வெற்றியளிக்கும், தேகசுகம் நல்ல நிலையில் இருக்கும். இனசன கொண்டாட்டம், காரிய வெற்றி உண்டு, வியாபாரிகள் புதிய முதலீடுகளில் ஆர்வம் காட்டுவர், நல்ல முன்னேற்றமுண்டு, பெண்களுக்கு மகிழ்ச்சியான குடும்பவாழ்க்கை காணப்படும், கணவர் பிள்ளைகளின் ஆதரவு உண்டு, மாணவர்கள் விளையாட்டில் ஆர்வம் காட்டுவர்.

## துலாம்

**சித்திரை 3,4ஆம் பாதம், சுவாதி, வீசாகம், 1,2,3ஆம் பாதம்**

தொழிற்துறையில் எதிரிகளின் ஆதிக்கம் இருக்கும், மனவேதனையைக் கொடுக்கும், பொருளாதார நிலை கவலையைக் கொடுக்கும். தேக சுகமுண்டு, வாகன யோகம் உண்டு, குடும்ப உறவு திருப்திகரமாக இருக்கும், எடுத்த காரியத்தில் வெற்றி கிடைக்கும், வியாபாரிகள் அதிக இலாபத்தை எதிர்பார்க்க முடியாது, புதிய முதலீட்டைத் தவிர்ப்பது நல்லது, பெண்களுக்குக் குடும்ப நிலை திருப்திகரமாக இராது, மாணவர்கள் கல்வியில் நல்ல முன்னேற்றம் காணப்படும்.

## விருச்சிகம்

**விசாகம், 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

தொழில் முன்னேற்றம் நல்ல நிலையில் இருக்கும், வெளியூர்ப் பிரயாணங்கள் நன்மை தரும், தேக சுகம் இடையிடையே பாதிக்கப்படும், அதிக பிரயாசை உண்டு, பொருளாதாரநிலை சமனாக இருக்கும், பெண்களால் அதிக நன்மை உண்டு, வியாபாரிகள் தொழிலில் சமநிலை காணப்படும், முதலீடு செய்வதில் அவதானம் வேண்டும், பெண்களுக்குக் குடும்பத்தில் மகிழ்ச்சி, கணவர் பிள்ளைகள் ஆதரவாக இருப்பர், மாணவர்கள் கல்வியில் பின்னடைவு காணப்படும்.

## தனு

**மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்**

தொழிலில் பின்னடைவு காணப்படும், கொடுக்கல்வாங்கலில் பிரச்சினைகள் உருவாகும், வீண்பழி கேட்க நேரிடலாம், வாகனத்தால் நஷ்டமுண்டு. தேகசுகம் பாதிக்கப்படுவதுடன் மனக்கஷ்டமுண்டு, விவாகமுயற்சிகள் தடைப்படும், பிரயாணங்களைத் தவிர்ப்பது நல்லது. வியாபாரிகளுக்கு விரோதிகள் அதிகமாக இருப்பர். போட்டியும், பொறாமையும் அதிகம் காணப்படும், பெண்களுக்கு குடும்பத்தில் மாறிமாறி பிரச்சினைகள் தலைதூக்கும், மாணவர் கல்வியில் பின்னடைவு உண்டு.

## மகரம்

**உத்தராடம், 2,3,4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதம்**

தொழிற்துறையில் நல்ல முன்னேற்றம் உண்டு, பெண்களால் நன்மையுண்டு, பொருளாதார நிலை சீராக இருக்கும், உதவிகள் தாராளமாகக் கிடைக்கும், பெரியோர் மதிப்பும் ஆதரவும் உண்டு, வியாபாரிகளுக்கு நல்ல இலாபம். பெண்களுக்குக் குடும்பத்தில் சந்தோஷம் காணப்படும், களஸ்திர சுகமுண்டு, மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமுண்டு.

## கும்பம்

**அவிட்டம், 3,4ஆம் பாதம், சதயம், பூரட்டாதி, 1,2,3ஆம் பாதம்**

தொழிற்துறை சிறப்பைத் தராது, தொழில் செய்யுமிடத்தில் பிரச்சினைகளையும் பகையையும் கொடுக்கும், தேகசுகம் பாதிக்கப்படும், வயிறு, நரம்பு சம்பந்தமான வியாதிகளைக் கொடுக்கும், பொருளாதார கஷ்டமுண்டு, வெளியூர் பிரயாணத்தால் அலைச்சலும், கஷ்டமும் உண்டு, அவதானமாக இருப்பது நல்லது, பெண்களுக்கு குடும்ப சுகம் பாதிக்கப்படும், மாணவர் மனம், உடல் சோர்வாக இருக்கும்.

## மீனம்

**பூரட்டாதி, 4ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி**

தொழில் முன்னேற்றமுண்டு, நினைத்த காரியம் சித்திக்கும், தேக ஆரோக்கியம் மனச்சந்தோஷம் காணப்படும், பொருளாதார முன்னேற்றமுண்டு, பெரியோர் மதிப்பும், பேரும்புகழும் கிடைக்கும், குடும்ப உறவு நல்ல நிலையில் இருக்கும், வியாபாரிகளுக்கு நன்மையுண்டு, முதலீடு செய்யலாம், நல்ல இலாபம் கிடைக்கும், பெண்களுக்கு குடும்ப சுகமுண்டு, பொருட்சேர்க்கை, களஸ்திர சுகமுண்டு, மாணவர்கள் கல்வியில் நல்ல முன்னேற்றமுண்டு.

பிரபல சோதிடர் எஸ். குகநேசன்

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

*ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்*
*பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து.*
*- திருக்குறள்*

# நமது நோக்கு

## எதிர்ப்பினூடான உறுதிப்பாடு!

சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து - விடுதலைப் புலிகளின் வர்த்தகக் கப்பலைத் தாக்கியழித்து அடாவடித்தனம் புரிந்த கடற்படையின், பாரதூரமான கொடுஞ்செயலும் -

இவ்வாறானதொரு சம்பவத்தைத் தடுத்து நிறுத்தவோ, கடற்படையைக் கட்டுப்படுத்தவோ இலாயக்கற்றமுறையில் இருக்கும் அரசாங்கத்தின் கையாலாகாத்தனமும் -

எதுவித முன்யோசனையுமின்றி - ஜனாதிபதிக்குரிய பொறுப்புணர்வற்று, தான்தோன்றித்தனமாகச் செயற்பட்டுவரும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின், அமைதியை அழிப்பதான நடவடிக்கைகளும்,

போர் நிறுத்தத்தைச் செம்மையாக அமுல்படுத்துவதற்கும், கண்காணிப்பதற்கும் நியமிக்கப்பட்ட கண்காணிப்புக்குழுவின் அதிகாரமற்ற தன்மையும் -

அமைதி முயற்சிகளில் தீவிரமான பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதோடு, சமாதானப் பேச்சுக்களை தற்காலிகமாக இடைநிறுத்தும் யோசனைக்கு - விடுதலைப் புலிகளை இட்டுச்செல்வதற்கான அழுத்தத்தையும் தந்திருக்கின்றன.

சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னரே - ஒரு தலைப்பட்சமாகப் போர் நிறுத்தத்தை அறிவித்து, சமாதானத்திற்கான ஆரம்ப நகர்வைத் தொடங்கியது முதலாக- அமைதி முயற்சிகளின் ஒவ்வொரு கட்டத்திலும் - விடுதலைப் புலிகள் மிகவும் உறுதியோடு சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான செயற்பாடுகளில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டனர்.

அமைதிப் பேச்சுக்கள் ஒருபுறம் நடந்து வந்தபோதும் - இராணுவ நலன்சார்ந்த விடயங்களில் விட்டுக் கொடுப்புக்களைச் செய்யாது - விதண்டாவாதத்தையும், பிடிவாதத்தையும் கடைப்பிடித்துவந்த படைத்தரப்பு -

விடுதலைப் புலிகளைச் சீண்டி ஆத்திரமூட்டுவதான செயல்களிலேயே நாட்டங்காட்டி வந்தது.

விடுதலைப் புலிகளின் தளபதிகள் கடற்பயணம் சென்றபோது அவர்களைத் தடுக்க முனைந்தது முதலாக அரசியற் பணிகளுக்காகச் செல்லும் போராளிகளைக் கைதுசெய்வது, சுற்றிவளைத்து மிரட்டுவது, பெண் போராளிகள் மீது திட்டமிட்டு நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதல்கள் எனத் தொடர்ந்து நெடுந்தீவுக் கடற்பரப்பில் மூன்று போராளிகள் உயிர் துறக்கவும்- இறுதியாக, சர்வதேசக் கடற்பரப்பில் கடற்படை நடாத்திய அடாவடித்தனமான அத்துமீறலில், பதினொரு போராளிகள் மாய்ந்துபோகவுமாக படையினரின் செயல்கள் எல்லை மீறிச்செல்வதாக அமைந்தன.

இந்த ஒவ்வொரு சம்பவங்களும் - கௌரவமும், கட்டுக்கோப்பும் மிக்க ஒரு தேசிய விடுதலை இயக்கத்தை, அதனை வழிநடாத்தும் தலைமையை - ஆத்திரமூட்டவே செய்யும் என்பதில் இரு கருத்துக்கள் இருக்கமுடியாது.

போர் நடைபெற்றபோது - விடுதலைப் புலிகளின் உக்கிரமான, துணிச்சலான தாக்குதல்களில் - அடிவாங்கிய, பின்வாங்கிச் சென்ற படையினர் -

அமைதிக்காலத்தில் - அதியுச்சப் பொறுமையைக் காத்துவரும் போராளிகளைத் தாக்குவதும், அசிங்கப்படுத்த முனைவதும் -

- தன்மானமுள்ள எவரையும் வீறுகொண்டெழவும், எதிர்ப்புக்காட்டவுமே செய்யும் -

இந்தவகையில் - அளப்பரிய தியாகங்களுடன் வளர்த்தெடுக்கப்பட்ட தேசிய விடுதலை அமைப்பின் போராளிகளைக் கொச்சைப்படுத்தவும், அடாவடித்தனத்திற்குள்ளாக்கவும் - அமைதிக்காலத்தையும், புலிகளின் பொறுமையையும்- வாய்ப்பாகக்கொண்டு ஈனத்தனமான துஷ்பிரயோகம் செய்தவர்கள் - கட்டுப்படுத்தப்படாதபட்சத்தில் - கௌரவமான அமைதிக்கும், பெறுமதிமிக்க பொறுமைக்கும் அர்த்தமில்லாமற்போய்விடும் என்பதை மறுக்கமுடியாது.

இதன்வழியே - கப்பல் அழிப்புச் சம்பவத்தின் பின்னரும் கூட, தமது நியாயமான எதிர்ப்பைப் பதிவு செய்வதற்காக, விடுதலைப் புலிகள்- பேச்சுவார்த்தைகளில் தற்காலிகமாகப் பங்கேற்காது ஒதுங்கிக்கொள்ளலாமா எனச் சிந்தித்து வருவதான செய்தி -

அவர்கள் - எந்தளவு தூரத்திற்கு ஆத்திரமூட்டப்பட்டிருக்கிறார்கள் என்பதையே வெளிப்படுத்துகின்றது.

ஆனாலும்- அமைதி முயற்சிகளில் தாம் வைத்துள்ள நம்பிக்கையும், உறுதியும் இன்னமும் அற்றுப்போய்விடவில்லை என, விடுதலைப் புலிகள் வலியுறுத்தியிருப்பதானது -

சமாதான முயற்சிகளினால் - தமிழ்மக்களுக்கு நிரந்தரமான கௌரவமான அரசியற்தீர்வொன்றைப் பெற்றுக்கொடுப்பதில் அவர்களுக்குள்ள விசுவாசத்தையும்,

மத்தியஸ்தப் பணிகளிலும், பரஸ்பர உறவைப் பேணுவதிலும் தீவிரமாகச் செயற்பட்டுவரும் சர்வதேசத்திற்கு அளிக்கும் மதிப்பையுமே எடுத்துக்காட்டியிருக்கிறது.

அதேவேளை - பேச்சுக்களைத் தற்காலிகமாக நிறுத்துவதற்குச் சிந்திப்பதான விடுதலைப் புலிகளின் கருத்தை, அமைதியைக் கட்டிக் காப்பதற்கான எச்சரிக்கையாகக் கொண்டு- சர்வதேசமும், அரசாங்கமும் தகுந்த ஏற்பாடுகளைச்செய்யத் தவறக்கூடாது.

விடுதலைப் புலிகளின் இந்த எதிர்ப்பின் வழியே - நிலைமையின் தீவிரத்தை உணர்வதற்கு இன்னமும் பின்னடிப்பும், அலட்சியமும் காட்டப்படுமாயின் - அது, விடுதலைப் புலிகளின் பொறுமையைச் சோதிப்பதாக அமைவதோடு - அமைதிக்காக இருக்கும் இறுதி வாய்ப்பையும் ஆட்டம் காணவே செய்துவிடும்.

# கடற்படை மூழ்கடித்த புலிகளின் கப்பலில் பத்து 130 மி.மீ ஆட்லறிகள் இருந்தனவாம்!

## பாதுகாப்பு வட்டாரங்கள் கூறுவதாகத் தகவல்

(யாழ்ப்பாணம்)

கிழக்குக் கடற்பரப்பில் மூழ்கடிக்கப்பட்ட புலிகளின் கப்பலில் - பத்து 130 மி.மீ. நீண்டதூர ஆட்லறிகள் இருந்ததாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்ததாகக் கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

புலிகளின் கப்பலில் 30 கி.மீ வீச்செல்லை கொண்ட பத்து 130 மி.மீ நீண்டதூர ஆட்லறிகளும், 140 பெட்டிகளில் அவற்றுக்கான வெடிபொருட்களும் கொண்டுவரப்பட்டன என்றும்,

அத்துடன், 17.5 கி.மீ வீச்செல்லை கொண்ட 152 மி.மீ ஆட்லறிகளுக்கான ஷெல்கள் 60 பெட்டிகளிலும், 300 பெட்டிகளில் 82 மி.மீ மோட்டார் குண்டுகளும் மற்றும் பெருமளவு 82 மி.மீ மோட்டார்களும், கனரக ஆயுதங்களும் இக்கப்பலில் கொண்டுவரப்பட்டன என்றும்,

சீனத் தயாரிப்பான 130 மி.மீ ஆட்லறிகளை இராணுவம் 1991 முதல் பயன்படுத்தி வருவதாகவும் கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, இந்தக் கப்பலில் பயணஞ்செய்து உயிரிழந்த 11 புலிகளில்- ஐவர் விமானத் தொழில்நுட்பத்துறையில் பயிற்சி பெற்றவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தின் பௌதிகவியல் பட்டதாரிகளான இவர்கள், விமானங்களை ஒருங்கிணைக்கும் தொழிநுட்பப் பயிற்சிகளைப் பெற்றுத் திரும்பியதாகவும், கொழும்பு ஊடகங்கள் பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டிச் செய்தி வெளியிட்டுள்ளன.

# பாதுகாப்பு அமைச்சராக இருக்க மாரப்பனவுக்கு ஒரு ரவையைச் சுட்ட அனுபவமாவது இருக்கிறதா?

## அனுரா பண்டாரநாயக்க கேள்வி

திலக் மாரப்பனவுக்குப் பாதுகாப்பைப் பற்றி என்ன தெரியும்? அவருக்குக் கைத்துப்பாக்கியால் ஒரு ரவையையாவது சுட்ட அனுபவம் இருக்கிறதா? என்று கேள்வி எழுப்பியுள்ளார் அனுரா பண்டாரநாயக்கா.

கொழும்பில் நடந்த கூட்டமொன்றில் உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார். அக்கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

திலக் மாரப்பனவுக்குப் பாதுகாப்பு அமைச்சர் பதவி கொடுக்கப்பட்டிருக்கிறது. அவருக்குக் கைத்துப்பாக்கியால் ஒரு ரவையைச் சுட்ட அனுபவம்கூடக் கிடையாது. இப்படியாக இருக்கும்போது, எவ்வாறு பாதுகாப்பு அமைச்சர் பதவியைக் கொடுக்கமுடியும்?

திலக் மாரப்பன சட்டத்துறையில் வல்லுநராக இருக்கலாம். ஆனால், பாதுகாப்புத் துறையைப் பொறுத்தவரையில் அவர் எந்த அனுபவமும் அற்றவர். இதனால், இவரைப் இப்பதவியிலிருந்து நீக்கிவிட்டு, ஜனாதிபதி சந்திரிகா பாதுகாப்பு அமைச்சர் பதவியை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அநுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

# தமிழ் எம்.பிக்களின் கூட்டமைப்பு விரைவில் அமைக்க ஏற்பாடு

## செல்வம் அடைக்கலநாதன் தகவல்

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் உறுப்பினர்களை உள்ளடக்கிய அமைப்பு ஒன்று விரைவில் நிறுவப்பட இருக்கிறது.

இந்த அமைப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுடன், புளொட், ஈ.பி.டி.பி, ஐக்கிய தேசியக் கட்சி, பொதுஜன ஐக்கிய முன்னணியில் உள்ள அங்கத்தவர்களும் இணையவிருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

தமிழ்மக்களின் பிரச்சினை தொடர்பாக- அனைவரின் குரல்களும் ஒருமித்து ஒலிக்கவேண்டும் என்ற நோக்கத்தில் இந்த அமைப்பு அமைக்கப்படவிருப்பதாகவும் அவர் கூறினார்.

# பத்திரிகையாளரைத் தாக்கிய பொலிஸார் மீது நடவடிக்கை

பத்திரிகையாளர் திருச்செல்வம்- பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ்க் கைதாகித் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது- அவரைத் தாக்கித் துன்புறுத்திய பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

பொலிஸ்மா அதிபரின் உத்தரவிற்கிணங்க விசேட புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் இதற்கான நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொண்டுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு - பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டுமென - மனித உரிமை ஆணைக்குழு விடுத்த வேண்டுகோளையடுத்தே பொலிஸ்மா அதிபர் இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

# புலிகளைப் பொலிஸார் வழிமறித்ததால் கந்தளாயில் ஏற்பட்ட முறுகல் நிலை!

கந்தளாயிலிருந்து புலிகள் மொரவெவ செல்ல முயன்றபோது, பொலிஸார் தடுத்து நிறுத்தியதால் பொலிஸாருக்கும் புலிகளுக்குமிடையில் ஏற்பட்ட முறுகல்நிலை பின்னர் சுமூகமாகத் தீர்க்கப்பட்டது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது, கடந்த செவ்வாய்க்கிழமை இரவு சுமார் 200 புலிகள் கந்தளாயில் இருந்து மொரவெவவுக்குச் சென்றுகொண்டிருந்தனர்.

இவர்களைத் தம்பலகாமம் பகுதியில்- வீதித் தடையில் வழிமறித்த பொலிஸார் அவர்களை விசாரணைகளுக்குட்டுபத்தினர். இதனால், இருதரப்புக்குமிடையில் வாய்த்தர்க்கம் ஏற்படவே சில புலிகளை ஜீப்பில் ஏற்றிப் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டுசெல்லப் பொலிஸார் முயன்றனர். இதனால் நிலைமை மேலும் மோசமடைந்தது.

இதுதொடர்பான தகவல் திருகோணமலைப்பகுதி இராணுவக் கட்டளை அதிகாரிக்கு அறிவிக்கப்பட்டதுடன், கண்காணிப்புக்குழுவுக்கும் தெரிவிக்கப்பட்டது. உயர் இராணுவ அதிகாரி- புலிகள் மற்றும் பொலிஸாருடன் பேசி நிலைமையைச் சுமூகநிலைக்குக் கொண்டு வந்தனர்.

இதனால் அப்பகுதியில் தோன்றிய முறுகல்நிலை முடிவுககு வந்தது.

# சமஷ்டிமுறை குறித்த அறிக்கை மகாநாயக்கர்களிடம் கையளிப்பு!

## ஐவர் கொண்ட குழு தயாரித்தது

(கொழும்பு)

ஐம்பது சிங்கள பௌத்த அமைப்புக்கள் அங்கம் வகிக்கும் தேசிய ஒருங்கிணைப்புக் குழுவால் சமஷ்டி குறித்து ஆராய நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கை மகாநாயக்கர்களிடம் கையளிக்கப்பட்டிருக்கிறது.

தேசிய ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவர் கலாநிதி திஸநாயக்க இதுபற்றிக் கூறியபோது,

மல்வத்த மகாநாயக்க ரம்புக்வெல விபஸி தேரோவின் வேண்டுகோளின்பேரிலேயே, முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி வல்பிட்டிய தலைமையில் ஐந்துபேர் கொண்ட ஆணைக் குழு அமைக்கப்பட்டது.

இந்த ஆணைக்குழுவில் ரணசுந்தர, லூசியன் டீ அல்விஸ், டக்ளஸ் பிறேமரட்ண, அக்பர் ஆகியோரும் இடம்பெற்றிருந்தனர்.

இந்த ஆணைக்குழு சமஷ்டி குறித்து ஆராய்ந்து, அது தொடர்பான இறுதி அறிக்கையைக் கையளித்துள்ளது. சமஷ்டி அமைப்பு உருவாக்கப்படுவதற்கான முயற்சியின் பின்னணி, இதனால் ஏற்படக்கூடிய விளைவுகள், சமஷ்டிக்கு மாற்றீடான ஆட்சிமுறை, சமஷ்டி அமைப்பில் நாட்டின் இறைமையையும், தேசிய ஒருமைப்பாட்டையும் பாதுகாக்கக்கூடிய வழிவகைகள், இலங்கையில் சமஷ்டி அமையக் கூடிய முறை என்பனபோன்ற பல்வேறு கோணங்களில் ஆராய்ந்து இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கின்றது.

இது தொடர்பாக- பொதுமக்களும் தமது கருத்துக்களைத் தெரிவிக்குமாறு தேசிய ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரான கலாநிதி திஸநாயக்க கோரியுள்ளார்.

# வளம் பேணி உங்கள் நலன் காப்போம்!



வடமராட்சி கிழக்கில் தேவைக்கு அதிகமாக மண்வளம் உள்ளது என்ற எண்ணத்தில் மண்ணைப் பெறுவதற்காக குடத்தனையில் உள்ள வளம்பேணும் சங்கத்திற்கு முன்பாக முண்டியடிக்கும் பொதுமக்கள்...

ஆனால், வளம்பேணும் சங்கத்தால் இவர்களின் முழுத் தேவைகளையும் பூர்த்திசெய்ய முடியுமா?



1985 ஆம் ஆண்டிற்கு முன்னர் இப்பகுதியின் மண்வளத்தைப் பாதுகாப்பதற்கென, புவியியலாளர்களின் ஆலோசனைக்கேற்ப சவுக்கு மரங்கள் மணற்காட்டிலும் குடத்தனையிலும் நாட்டப்பட்டன. ஆனால், கட்டுப்பாடின்றி இப்பகுதியில் முன்னர் மண் அகழப்பட்டதால், இப்பகுதியில் பாரிய, நீண்ட நிலப்பரப்பில் பள்ளமேற்பட்டு, நீர் தேங்கிநிற்பதுடன், சவுக்கு மரங்களும் அழிக்கப்பட்டுள்ளன. இதைவிட, படைத்துறையினராலும் சவுக்குமரங்கள் அழிக்கப்பட்டுள்ளன. இது இப்படியே தொடர்ந்தால் இப்பகுதியின் நிலை என்ன?



படத்தில் மேலுள்ள மண்பிட்டிகள் போன்றே கீழேயும் மண்பிட்டிகள் முன்னர் காணப்பட்டன. தற்போது ஒரு பகுதியில் நீர் தேங்கி உள்ளதுடன், மறுபகுதியில் சில மண்பிட்டிகள் காணப்படுகின்றன. இந்த பிட்டிகளுக்கிடையில் மண் அகழப்பட்டதால், கடல்நீர் குடிமனைப் பகுதிக்குள் புகுவதற்குரிய வாய்ப்பு அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இதைத் தடுத்து நிறுத்தாதுவிட்டால், இப்பகுதித் தண்ணீர் உவர்நீராக மாறப்போவது நிச்சயம். இதனால், விவசாய நிலங்கள் உட்பட இப்பகுதி முற்றாகப் பாதிப்படைய வாய்ப்பு உள்ளது. இதைத் தடுக்க வேண்டாமா?

**வடமராட்சி கிழக்கு, யாழ்.குடாநாட்டின் மண்வளம் கொழிக்கும் இடமாக ஒரு காலத்தில் இருந்து வந்தது. இப்பகுதியில் மணற்காட்டில் இருந்து குடத்தனை தொடக்கம் நாகர்கோவில்வரை, மணல் பிட்டிகள் காணப்பட்டன. ஆனால், இன்று இங்கு போதிய மண்வளம் உள்ளதா?**

**இங்கு மண் அகழப்படுவதால் ஏற்படும் பாதிப்பு என்ன?**

**- என்பன பற்றி ஆராய்ந்தால் அனைவரின் தேவையினையும் பூர்த்தி செய்யக்கூடிய நிலையில் இங்கு மண் அகழப்பட்டால், இப்பகுதி கடலில் மூழ்கும் அபாயம் ஏற்பட்ட வாய்ப்பு உள்ளதாக புவியியலாளர்கள் எச்சரிக்கின்றனர்.**

**இதனால், இப்பகுதியில் பாதிப்பு ஏற்படாத வகையில், மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மண் வழங்கக்கூடிய மாற்றுத்திட்டம் ஒன்றை புவியியலாளர்களின் ஆலோசனைக்கு ஏற்ப, செயற்படுத்த உள்ளோம். கடந்த காலங்களில் கட்டுப்பாடு இன்றி மண் அகழப்பட்டதும் மண்வளம் தற்போது கூடுதலாக உள்ள அம்பன், நாகர்கோவில் பகுதியில் படைத்துறையினர் உயர் பாதுகாப்பு வலயம் அமைத்துள்ளதால், இப்பகுதியில் இருந்து மண் எடுக்க முடியாத நிலைமை உள்ளது. கடந்த காலங்களில் மண் அகழப்பட்டதால் ஏற்பட்ட பாதிப்பை மேற்படி படங்கள் விபரிக்கின்றன. எனினும், குடாநாட்டின் மண் தேவையை நிவர்த்தி செய்ய மனிதாபிமான முறையில் இப்பகுதியின் மண்ணின் ஒரு பகுதியை புவியியலாளர்களின் ஆலோசனைக்கேற்ப வழங்க நாம் தயார்.**

**ஆனால், இம்மண்ணை எடுப்பதானால் காட்டின் நடுப்பகுதிக்குச் செல்ல வேண்டும். இதற்கு மணல் உள்ள பகுதியை நோக்கி வீதி அமைக்கப்பட்டால், இப்பகுதியில் ஓர் அளவிற்கு மண் அள்ள முடியும். அல்லது நாகர்கோவில் பகுதியில் மணல் அள்ள படைத்துறை அனுமதிக்க வேண்டும். இதற்கு தொண்டு நிறுவனங்களும் படைத்துறையும் மனிதாபிமானத்துடன் செயற்பட முன்வந்தால் நாமும் குடாநாட்டின் தேவை கருதி மண் வழங்குவது பற்றி துரிதமாக பரிசீலிக்க முடியும். முடிவு எம்பக்கம் அல்ல.**

**குடத்தனை.**

**வடமராட்சி கிழக்கு**
**வளம்பேணும் சங்கம்.**

(சி-676)




# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003




## முத்தமிடத் தோணுதப்பா....!



ஒட்டினோ - டிக்கோலா சொல்கிறார், நாங்கள் கொல்கிறோம்.

'இவங்க யாரப்பா? படங்கள் காட்டுறீங்களா' என்று கேட்டால் கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருந் தது. 2003 கென்யாவைப் பொறுத்த வரை எல்லாவற்றையும் மாற்றிவிட் டது. கென்ய வீரர்களைத் தொடர்ச் சியாக T.Vயில் பார்த்து, பத்திரிகை யில் பார்த்து அவர்களின் முகங்கள் நன்கு பரிச்சயமாகிவிட்டன. பெயர்க ளும் அப்படியே உச்சரிப்புக்குச் சுக மானவை. ஒடும்பே, ஒடயோ, ஒட்டி னோ, ஒபுயா, ஓங்கொண்டா என்று




அன்டி பிளவர் - தனி மரமாய் நிற்கிறீர்கள்.

ஓங்காரமிடும் நாமங்கள். அப்பால் அணித்தலைவர் டிக்கோலா. இன் னும் வரிசை நீள்கிறது.

அதுமட்டுமல்ல. கென்யாவின் கையும் நன்றாகத்தான் நீண்டு விட் டது. இல்லாவிட்டால் இலங்கைக்கு அறைந்த அறையின் சூடு ஆறுமுன் னமே, சிம்பாப்வேக்கு இப்படியொரு அறை விழுந்திருக்குமா? அதுமட் டுமா. துள்ளி எழுந்து அரை இறுதிப் போட்டியின் மூன்றாவது இடத்துக் கும் வந்து இந்தியாவைப் பார்த்து ஆபிரிக்கச் சிங்கங்கங்களாகக் கர்ச்சித்துக் கொண்டிருக்கிறார்கள். வங்கத்தின் சிங்கமும் தோழர்களும் குறைந்தவர்கள் அல்ல என்பது நிரூபிக்கப்பட்ட விடயந்தான். ஆனால் ஆபிரிக்காவின் கிழக்குக்கரையிலிருந்து புறப்பட்ட இந்தக் கென்யப் புயல், அரபிக்கடலைக் கடந்து இந்தியாவின் வாயிலில் நிற்கிறது. இந்தப் பாய்ச்சல் லேசானது அல்ல என்பதை கிரிக் கெட் உலகம் நன்கறிந்திருக்கும்.

கென்யா ஒரு டெஸ்ட் அணியல்ல (சர்வதேச உயர்தகைமை) என்பது DATA + STATISTICS ஐப் பொறுத்துச் சரி. ஆனால் இந்த நிமிடத்தில் அவர்களை அளக்க அளவுகோல் ஏது? அணி வீரர்களின் போராடும் CAPACITY எந்தளவு உச்சம்? ஒபுயா இலங்கைக்குச் சாத்தினால், ஒடயோ, ஒடும்பே, சுஜி ஆகியோர் சிம்பாப்வேயை நொறுக்கிவிட்டார் கள். இன்றைய நாளில் எல்லாவற்றுக் கும் மேலாகக் கிரிக்கெட் உலகில் பேசப்படும் விடயம் என்னவாக இருக்குமென்றால், கென்யா - கென்யா - கென்யாதான்.

கென்யா உள்ளே என்பது வெறும் அதிர்ஷ்டமல்ல என்பதை எல்லோ ரும் ஏற்றுக்கொள்வார்கள். அதற்கு அவர்கள் ஆடிய ஆட்டங்களே சான்று. இனி அடுத்த ஆட்டங்கள் என்னவா




ரவிந்து ஷா - நிமிர்ந்து பார்க்க நேரமில்லைங்க!

கும்? (அரை இறுதி ஆட்டம்)

அதற்குமுன் உள்ள இன்னொரு சோதனை - 15 ஆம் திகதி SUPER SIX இறுதி ஆட்டம், கென்யா VS அவுஸ்திரேலியா. இந்த ஆட்டத்தின் முடிவு என்னவாக இருக்கும் என்று பார்ப்பதைவிட, கென்ய அணி அவுஸ்திரேலிய அணியின் படுக்கை அறைவரை சென்று தூக்கத்தைக் கெடுத்துக் கொண்டிருக்கிறது என்று மட்டும் நிச்சயமாகச் சொல்லலாம். AFRICA ROARS.

- ஜோசப் கிருஷ்ணா.

## சத்தியமாக...



ஜெப் தொம்சன்

அவுஸ்திரேலிய அணி உலகக்கிண்ணத்தை வெல்வதற்குக் கையாளும் தந்திரந்தான் என்ன? எதிரணி வீரர்களை இலக்காக்கிப் பந்து வீசுவதன் மூலமே, தம் இலக்கை எட்டப்போகின்றார்கள். பொதுவாக ஆசிய அணிகள் SHORT PITCHED பந்துகளை எதிர்கொண்டு விளையாடுவதில் அவ்வளவு நேர்த்தியை அல்லது ஆக்ரோஷத்தைக் காட்டுவதில்லை. அதையும்விட அவர்கள் நிலைகுலைந்து விடுவதையே காணக்கூடியதாகவும் இருக்கின்றது. அவுஸ்திரேலியா, இலங்கை மீது கொண்ட மாபெரும் வெற்றியின்போது பிரெட் லீயின் இத்தகைய பந்துகள், ஒரு ஓவரில் இரு தடவைகள் சனத்

## நான் சொல்வதெல்லாம் உண்மை

தைத் தாக்கியதால், அவர் வைத்தியசாலைக்குச் செல்லவேண்டி ஏற்பட்டது.

இதேபோல, தற்போது மக்ராவின் பந்துவீச்சு வேகம் குறைவு என்றாலும், அவரும் மிக நேர்த்தியாக பந்தைக் குத்தியெழுப்பி, துடுப்பாட்ட வீரரை நிலைகுலைய வைத்துவிடுகிறார். பந்தைக் குத்தியெழுப்புதல் அவுஸ்திரேலிய அணிக்கு இரண்டு வகையில் லாபத்தைக் கொடுக்கின்றது போலத் தெரிகின்றது.

ஒன்று- துடுப்பாட்ட வீரரை நிலைகுலையவைத்து விக்கெட்டைப் பெற்றுக்கொள்வது. இன்னொன்று - ஓட்டம்பெற இயலாத (DOT BALL) பந்தாக அதனை மாற்றிக்கொள்வது. பாரம் கூடிய துடுப்புக்களைப் பயன்படுத்தும் துடுப்பாட்ட வீரர்கள், அநேகமாக இத்தகைய பந்துகளைத் தவிர்த்துக் கொள்ளவே விரும்புவார்கள். மறுவளமாக அது DOT BALL ஆகி விடுகிறது. இத்தகைய ஒரு பாணியைப் பின்பற்றுவதன் மூலமே, அவுஸ்திரேலியா உலகக் கிண்ணத்தை வெற்றிகொள்ள இயலுமாக இருக்கும்.

உலகக் கிண்ண இறுதிப்போட்டிக்கு அநேகமாக அவுஸ்திரேலியா தகுதிபெறும். இறுதிப்போட்டி நடைபெறவிருக்கும் ஜோஹனஸ்பேர்க் வண்டாஸ் மைதானம், தென்னாபிரிக்காவிலேயே மிகவும் வேகமான தடத்தைக் கொண்டதாகும். எனவே, அவுஸ்திரேலிய அணிக்கு இன்னும் வாய்ப்பாக இருக்கும். மேலும், இலங்கை, இந்திய அணிகளை அவுஸ்திரேலிய அணி இவ்விதமே வீழ்த்தி வெற்றிகண்டது. பொதுவாக உடலமைப்பில் இலங்கை, இந்திய வீரர்கள் அவ்வளவு தூரம் உயரம், பருமன் கொண்டவர்களல்ல. இந்நிலையில் உயரம், பருமன் கொண்ட அவுஸ்திரேலிய அணியினர், தம் உடல்வாகை நன்கு பயன்படுத்திப் பந்து வீசுகின்றார்கள். இவர்களினால் உருவாக்கப்படும் வேகத்திறன், எதிரணித் துடுப்பாட்ட வீரரைக் களத்திலிருந்து வெளியேற்றுகின்றது. பொதுவாக ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் பாரம்பரியமுறை இதுவல்ல. இது அவுஸ்திரேலியர்கள் தமக்கு வகுத்துக்கொண்ட புதுவழி. இத்தகைய கருத்துக்கள் அவுஸ்திரேலிய அணியின் திறமைமீது கொண்ட அழுக்காற்றால் எழுதப்பட்டவை என்று வாசகர்கள் தீர்மானித்தால், ஏமாந்துபோவீர்கள். ஏனெனில், எண்பதுகளில் BOUNCER மன்னன் என்று வர்ணிக்கப்பட்ட அவுஸ்திரேலியாவின் வேகப்பந்து வீச்சாளர் ஜெப் தொம்சன் கூறிய கருத்துகளே மேற்கண்டவையாகும். தொம்சன் கூறும் மேற்படி கருத்துகள், அவுஸ்திரேலிய அணியை குறைகூறுமாற் போலும் தெரியவில்லை. அதுதான் சரியான வழிமுறை என்று கருதுவதாகவும் தெரியவில்லை. அவர் தனது அவதானத்தை கருத்துக்குவியலாக முன்வைத்திருக்கின்றார். ரசிகர்களும் தொடர்ந்து ஆட்டங்களைப் பார்ப்பவர்கள். ஆய்ந்தோய்ந்து பார்க்கத் தெரிந்தவர்கள், உண்மையான நீதிபதிகள்- ரசிகர்களே. தீர்ப்பு உங்களுடையதாக இருக்கட்டும்! - *நிர்மலன்.*

## ஆரோக்கியமான முறையில் அமோக ஆதரவு தாருங்கள் இறுக்கமான ஓர் போட்டியை வழங்க காத்திருக்கின்றோம்

### யாழ். மத்திய - புனித யோவான் அணித்தலைவர்கள் கருத்து

**விமலதாசன் ரஜீவ்குமார்**
*யாழ். மத்திய கல்லூரி அணித்தலைவர்*



5 ஆவது மாபெரும் போட்டியில் பங்குகொள்கிறார்.

மத்திய வரிசைத் துடுப்பாட்டவீரர்.


ஆரம்பப் பந்துவீச்சாளர்.

✹ கடந்த வருட அணித் தலைவர் உட்பட 3 சிரேஷ்ட வீரர்கள் அணியில் இடம்பெறுவதால் அணித் தலைவர் பொறுப்பில் சுமை இருக்காதென்று கருதுகிறேன்.

✹ இந்தப் பருவகால 9 போட்டிகளிலும் தோற்கடிக்கப்படாத அணியாகத் திகழ்கிறோம். ஒன்றிணைந்த அணியின் செயற்பாடுதான் எமது பலம்.

✹ கடந்த வருடப் போட்டியில் வெற்றி பெற்றோம். ரசிகர்கள் வழங்கும் ஆரோக்கியமான ஆதரவுடன் இவ்வருடம் இறுக்கமான போட்டி ஒன்றை வழங்கக் காத்திருக்கிறோம்.

**சந்திரராஜ் அகிலன்**
*புனித யோவான் கல்லூரி அணித்தலைவர்*



5 ஆவது மாபெரும் போட்டியில் பங்குகொள்கிறார்.

மத்தியவரிசைத் துடுப்பாட்டவீரர்.

ஆரம்பப் பந்துவீச்சாளர்.

✹ கடந்த வருட அணித் தலைவர் உட்பட 6 சிரேஷ்ட நிலை வீரர்கள் அணியில் உள்ளதால் எனது கடமைகள் இலகுவானதாயிருக்கும்.

✹ இந்தப் பருவகாலத்தின் அனைத்துப் போட்டிகளையும் வென்றோம். வீரர்கள் வெளிக்காட்டியிருக்கும் உச்சத் திறமைகளே எமது அணியின் பலம்.

✹ கடந்த வருட தவறுகளை நிவர்த்திக்கும் வகையில் அணியின் செயற்பாடு உள்ளது.

✹ ரசிகர்களின் அமோக ஆதரவுடன் வெற்றி வாய்ப்பு எமக்கே அதிகம்.

**இவர்களின் கருத்துக்களுக்கு இன்றைய கள நிலைமை பதில்சொல்லும்.**

*பேட்டி கண்டவர் - சிறிகஜன்*

## நாளும் ஒரு வினா

**2003 உலகக் கிண்ணப் போட்டிகளில் எதிர் இலக்கை வேகமாக எட்டிப்பிடித்த நாடு எது?**

**இலங்கை 4.4 ஓவர்கள்**
VS கனடா

**உலகக் கிண்ணக் கிரிக்கெட் அனுசரணை**

எமது தன்னியக்க இயந்திரம் மூலம் (ATM) உங்கள் நடைமுறைக் கணக்கு, சேமிப்புக் கணக்குகளை 24 மணிநேரமும் செயற்படுத்த முடியும்.



கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# புனரமைப்பு ஒருங்கிணைப்பு குழு பிரதமர் அலுவலகத்தில் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

வட-கிழக்கில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புப் பணிகளை அரசதரப்பில் கவனிப்பதற்காக, விசேட அலுவலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

பிரதமரின் அலுவலகத்தில் அமைக்கப்பட்டிருக்கும் இவ் அலுவலகமே, எதிர்காலத்தில் வட-கிழக்கில் மேற்கொள்ளப்படவிருக்கும் அனைத்துப் புனர்வாழ்வுப் பணிகளையும் ஒருங்கிணைத்துச் செயற்படும்.

இவ் அலுவலகத்தின் செயற்பாடுகளை, பிரதமரின் செயலாளர் நேரடியாக அவதானித்து வழிநடத்துவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

## உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

ICC Cricket World Cup South Africa 2003

SUPER SIX ஆறாம் நாள்

இந்தியா Vs நியூசிலாந்து - SUPER SPORTS PARK CENTURION - 2 pm.

## இன்று யாழ்ப்பாணத்தில் கிரிக்கெட்

மாபெரும் துடுப்பாட்டம் பரி.யோவான் Vs மத்திய கல்லூரி - மத்திய கல்லூரி மைதானம்

பொன் அணிகள் போர் புனித பத்திரிசியார் கல்லூரி Vs யாழ்ப்பாணக் கல்லூரி -யாழ்ப்பாணக் கல்லூரி மைதானம்.

# வெற்றிமனைக்கு ஹெல்கிசன் நேற்று அடிக்கல் நாட்டினார்!



யுத்தம் காரணமாக உளவியல் பாதிப்புக்குட்பட்ட பெண்களைப் பராமரிக்கும் நிலையம் ஒன்று கிளிநொச்சியில் அமைக்கப்படவுள்ளது.

"வெற்றிமனை" என்ற பெயரில் நிர்மாணிக்கப்படவிருக்கும் இந்த நிலையத்துக்குரிய கட்டட நிர்மாணத்துக்கான அடிக்கல்லை, நோர்வே பிரதி வெளியுறவு அமைச்சர் விதார் ஹெல்கிசன் நாட்டிவைத்தார். இவ் வைபவம் கிளிநொச்சியில் நேற்று நடைபெற்றது

# வர்த்தகர், போராளிகளை மிரட்டிய இராணுவத்தினர்!

(யாழ்ப்பாணம்)

சர்வதேச கடற்பரப்பில் கடற்படையால் கொல்லப்பட்ட போராளிகளுக்கு துக்கம் அனுஷ்டித்த வடமராட்சி வர்த்தகர்களை படையினர் மிரட்டிப் பயமுறுத்தியுள்ளனர்.

மேற்படி சம்பவம் வடமராட்சியில் நேற்று நடைபெற்றது. இவற்றைவிட, நெல்லியடியில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளின் அலுவலகம் மீது வெளிச்சம் பாய்ச்சி படையினர் மிரட்டியுள்ளனர்.

மேற்படி சம்பவங்கள் தொடர்பாக விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் நேற்று முறைப்பாடு செய்தனர்.

இதேவேளை, முகமாலையூடாகப் பயணம்செய்த போராளிகளை அங்கு கடமையில் உள்ள படையினர் மிரட்டிப் பயமுறுத்திய சம்பவம் ஒன்றும் நேற்று நடைபெற்றது.

புலிகளுடன் விரைவில் யுத்தம் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. நீங்கள் ஏன் யாழ்ப்பாணம் செல்கின்றீர்கள் என்று கேட்டு, போராளிகளைப் படையினர் பயமுறுத்தியுள்ளனராம்.

இதேவேளை-

நெடுந்தீவில் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கக் காவலாளி ஒருவர்- அங்குள்ள ஈ.பி.டி.பியினரால் மிரட்டப்பட்டதாகவும் நேற்றிரவு தகவல் ஒன்று கிடைத்தது.

### பளையில் வைப்பகம் திறப்பு

பளையில் இன்று காலை 10 மணிக்கு தமிழீழ வைப்பகத்தின் கிளை ஒன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

நாடக ஆற்றுகையாளர்கள் தேவை
(Drama Performers)
எமது நிறுவனத்தின் துணை நிறுவனமாக "இயங்கும் செயல்திறன் அரங்க இயக்கம்" Active Theatre movement மிதிவெடி கல்வியூட்டல் செயற்பாட்டுக்காக இரண்டு நாடகங்களை புதிதாக தயாரித்து யாழ். மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் மேடையேற்றவுள்ளது. இவ்வாற்றுகைக்கு நடிகர்களாக பங்குபற்ற விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மிதிவெடி, வெடிபொருட்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
விண்ணப்ப முடிவுத்திகதி - 30.03.2003
வயது எல்லை - 20-35
தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:-
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,
'அருளகம்'
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(சி-675)

### திருமலையில் இன்று ஹர்த்தால்

(திருகோணமலை)

சமாதானமுயற்சிகளுக்கு எதிரான படை நடவடிக்கைகளைக் கண்டித்து திருகோணமலை மாவட்டத்தில் இன்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது. திருமலை வாழ் தமிழர் என்ற பொதுஜன அமைப்பு இதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

### வீதிதிறப்பு நேரம் நீடிப்பு?

(கொழும்பு)

திருத்தவேலைகளை மேற்கொள்ள வசதியாக ஏ-9 வீதியை இரண்டு மணி நேரம் மேலதிகமாக திறந்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. (01)

### இயன் மார்ட்டின் யாழ். வந்தார்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மன்னிப்புச்சபையின் முன்னாள் தலைவர் இயன் மார்ட்டின் நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார்.

யாழ்ப்பாணத்தில் பல்வேறு மனித உரிமைகள் ஆர்வலர்களுடன் இவர் பேசசுக்களை நடாத்தியுள்ளார். இன்று யாழ்ப்பாணத்திலிருந்து இவர் கொழும்பு புறப்பட்டுச்செல்லவிருக்கிறார்.

### நோர்வே...

ளர் தங்கன், புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் கைலாகு கொடுத்து வரவேற்றனர்.

பின்னர்- இவர்கள் சமாதானச் செயலகத்திற்கு விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் குழுவுடன் பேச்சு நடாத்துவதற்காகச் சென்றனர். அங்கு அவர்களை அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஆகியோர் வரவேற்றனர்.

இதேவேளை - நேற்றுமுன்தினம் கிளிநொச்சிக்கு வருகைதந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்த, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் புதிய தலைவர் மேஜர் ஜெனரல் ரெலவ்சன், நேற்றுக்காலை கொழும்பு திரும்புவதற்காக கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்திற்கு வருகை தந்தபோது, அங்கு வைத்து நோர்வேப் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசனைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

அங்கு வைத்துப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் புதிய தலைவர் மேஜர் ஜெனரல் ரெலவ்சனிடம் கிளிநொச்சி விஜயம் குறித்துக் கேட்டபோது- 'சர்வதேச கடற்பரப்பில் வைத்து, தமிழீழ விடுதலைப் புலிகளின் வர்த்தகக் கப்பல், இலங்கைக் கடற்படையினரால் தாக்கியழிக்கப்பட்ட சம்பவம் குறித்து, தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை அறிந்து கொண்ட நாம், இச்சம்பவம் குறித்த அறிக்கை ஒன்றினை விரைவில் வெளியிடவுள்ளோம்' எனத் தெரிவித்தார். (லி)

A/L 2005
வர்த்தகப் பிரிவு
B.ST.
ECO.
ACC.
BEACON
வெலிங்டன் சந்தியருகில்
தனிப்பாட
அனுமதியுண்டு.
ACC → 12 - 1
ECO → 11 - 12
COM → 1 - 2
(280)

# வவுனியா, மன்னாரில் ஹர்த்தால் அனுஷ்டிப்பு

விடுதலைப் புலிகளின் வணிகக் கப்பல் மீது, கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலைக் கண்டித்து, வவுனியாவில் நேற்று முழுமையான கடையடைப்புப் போராட்டம் இடம் பெற்றது.

வவுனியாவில் வணிக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. அத்துடன் பாடசாலைகள் எதுவும் இயங்கவில்லை. பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் சமுகமளித்திருந்த போதிலும் மாணவர்கள் எவரும் வருகை தரவில்லை.

அரச, அரசசார்பற்ற நிறுவனங்களும் செயலிழந்து காணப்பட்டன. தனியார் பஸ்கள் மட்டுமன்றி, வட பிராந்திய போக்குவரத்துக்குச் சொந்தமான பஸ்களும் பணியில் ஈடுபடுத்தப்படவில்லை.

இந்தக் கடையடைப்புப் போராட்டத்தை முறியடிப்பதற்குப் பொலிஸாரும், இராணுவத்தினரும் ஒலிபெருக்கி பொருத்திய வாகனங்களில் சென்று, மூடப்பட்ட கடைகளைத் திறக்குமாறு கேட்டும், மக்கள் முழுமையாகக் கடையடைப்புப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

இதேவேளை, மன்னாரிலும் முழு கடையடைப்புப் போராட்டம் இடம் பெற்றதென அறிவிக்கப்பட்டுள்ளது.

# கடற்படைத் தாக்குதல்...

ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டில் அவர் இக்கருத்துக்களை வெளியிட்டார்.

கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதல், யுத்தநிறுத்தத்தை மீறும் செயலாகக் கருதப்படமாட்டாது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இச்சம்பவம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீளமைக்க வேண்டிய கட்டாயத்தைத் தோற்றுவிக்கவில்லை என்றும் அவர் சொன்னார்.

விடுதலைப் புலிகளின் கப்பல் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல், நாட்டின் சட்டத்துக்கு அமைவானது. இலங்கையின் இறைமை மீது அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய இத்தகைய ஒரு அவசர காலகட்டத்தில், கடற்படையினர் முடிவினை தாமே எடுக்கும் உரிமை கொண்டவர்கள்.

கப்பலை அடையாளப் படுத்தக் கூடிய கொடி இல்லாமல், சர்வதேசக் கடலில் பயணம் செய்யும் கப்பலைத் தடுத்து நிறுத்தக் கடற்படையினருக்கு உரிமை உண்டு என்றும் அவர் தெரிவித்தார்.

பிரதமருக்கு பாதுகாப்புப் படைகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரங்கள் இல்லையென பாலசிங்கம் தெரிவித்திருப்பதாகக் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் பீரிஸ்-

அப்படிக் கூறியிருப்பது அடிப்படையற்றது. படைகள் எந்தச் சந்தர்ப்பத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பதை அரசு திடமாக, தெளிவாகக் கூறியுள்ளது என்றார்.

இதேவேளை, வட அயர்லாந்து சமாதான முயற்சியில் பெரும் பணியாற்றிய ஜோன் பீ, இம் மாதம் 31 ஆம் திகதி இலங்கை வருவதாகவும், இவர் கிளிநொச்சிக்குச் செல்லவுள்ளதாகவும் அமைச்சர் பீரிஸ் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

# பேச்சில் பங்குபற்றுவது...

பிரச்சினைகள் இனிமேல் நிகழாதவண்ணம் அரசிடம் உறுதிமொழி பெறவேண்டுமானால், அவர்களுடன் நேரடியாகப் பேசுவதுதான் நல்லது என, ஹெல்கிசன் எமக்கு எடுத்துச் சொன்னார். பேச்சுவார்த்தைகளை பகிஷ்கரிப்பது ஒரு எதிர்மறை விளைவைத்தான் ஏற்படுத்தும் எனவும் நோர்வே அமைச்சர் எமக்கு ஆலோசனை வழங்கினார். எனவே, இக்கருத்தை எமது தலைவருக்குக் கூறி, அவருடன் பேசுவோம். அநேகமாக தலைவர் பிரபாகரனும் எம்மைப் பேச்சுவார்த்தைக்கு அனுப்பிவைப்பார் என்றே கருதுகிறோம்.

### ஆட்சேபனையை வெளியிட்டோம்.

நாம் ஏற்கனவே கடுமையான ஆட்சேபனையை அரசிடம் கூறிவிட்டோம். கண்காணிப்புக் குழுவிடமும் முறைப்பாடு செய்துள்ளோம். கப்பல் மீதான அண்மைய தாக்குதல், கண்காணிப்புக் குழுவின் தலையீடின்றி கடற்படை சுயாதீனமாக நடவடிக்கை எடுத்துள்ளதைக் காட்டுகின்றது. இதற்கு ஆட்சேபனை தெரிவித்ததோடு, மேற்கொண்டும் இதுபோன்ற சம்பவம் நிகழாத வண்ணம் கண்காணிப்புக் குழுவுடன் பேசி புதிய நடைமுறைகளை அமுல்செய்ய முடிவுசெய்யப்பட்டது. இது குறித்த விபரங்களை இப்போதைக்கு தெரிவிக்கமுடியாது.

### படையினர் மத்தியில் பதற்றம்

எமது போராளிகளை நாம் வன்னிக்கு மீள அழைத்ததைத் தொடர்ந்து படையினர் மத்தியில் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இதனாலேயே கடந்த சில தினங்களாக படையினர் அச்சுறுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

### இராணுவச் சமநிலை பேணப்படவேண்டும்.

சிறிலங்கா அரசு ஆயுதங்களைக் கொண்டுவருவது, இராணுவ சமநிலையைப் பேணுவது என்பதற்கு முரணான விடயம். ஆகவே, முதலில் அவர்கள் ஆயுதங்கள் கொண்டு வருவதை நிறுத்தவேண்டும். புலிகள் ஆயுதங்கள் கொண்டுவருவதற்கு, இந்தப் போர்நிறுத்த ஒப்பந்தத்தில் தடை ஏதும் இல்லை. எனவே, இவ் விடயம் குறித்து இருதரப்பும் புதிதாகப் பேசவேண்டும். சிறிலங்கா, ஆயுதங்களை இறக்குமதி செய்தால், நாமும் ஆயுதங்களைக் கொண்டு வருவது தவிர்க்க முடியாது. அப்போதுதான் இராணுவச் சமநிலை பேணப்படும். இராணுவச் சமநிலை பேணப்படாவிட்டால் போர்நிறுத்தத்தைப் பேணுவது சாத்தியமற்றது.

போர்நிறுத்த உடன்பாட்டில், கடல் நடமாட்டம் சம்பந்தமாக தெளிவான விதப்புரைகள் எதுவும் இல்லை. இது ஒரு பெரிய குறை. இதைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி கடற்படை, புலிகள் மீது சில கட்டுப்பாடுகளைக் கொண்டுவர முயற்சிக்கிறது.

### மக்கள் அஞ்ச வேண்டியதில்லை.

எமது போராளிகள் திருப்பி அழைக்கப்பட்டது தொடர்பாக மக்கள் அச்சம் அடையத் தேவையில்லை. அவர்களுக்கு சில விளக்கங்களை கொடுக்கவே அழைத்தோம். எமது பொறுப்பாளர்கள் இன்னும் அங்கு தொடர்ந்து செயற்படுகின்றனர். எல்லோரையும் ஒரேயடியாக அழைக்கவில்லை எனவும் அன்ரன் பாலசிங்கம் சுட்டிக் காட்டினார். (லி)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 14.03.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.